# தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு

## Compass Group PLC

பிப்ரவரி 2011

# பொருளடக்கம்


**முன்னுரை**
ரிச்சர்ட் கஸின்ஸின் செய்தி 3
தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தை 4
உதவியும் அறிவுரையும் பெறுதல் 5
Speak Up 6

**நோக்கங்களும் பண்புகளும்** 7

**Compass வழி**
உணவுப்பாதுகாப்பு 8
பொறுப்புள்ள விநியோக தொடர் 9

**சுய நேர்மை**
ஆதாய முரண்பாடுகள் 10-11
உள் வர்த்தகம் 11
பரிசுகளும் உபசரணையும் 12-14

**வர்த்தக நேர்மை**
போட்டியும் நம்பிக்கை விரோதம் 15-16
பணச்சலவை 16
லஞ்சமும் ஊழலும் 17-18
புதிய பகுதிகள், புதிய துறைகள், முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள் 18
அறிக்கை சமர்ப்பித்தலும் கணக்கீடும் 19
தரவுத் தனியுரிமை 20

**வேலை**
ஆரோக்கியமும் பாதுகாப்பும் 21-22
நியாயமாக நடத்தப்படல் மற்றும் சமமான வேலை வாய்ப்புகள் 23
கொடுமை/சீண்டல் இன்றி பணி செய்வது 24

**நிறுவன சொத்துக்கள்**
பிரண்டு பாதுகாப்பு 25
ரகசியத்தன்மை 26
பொருட்கள்மிகுந்த சொத்துக்கள் 26
தகவல் பாதுகாப்பு 27

**வெளி நடவடிக்கை**
அரசாங்கம் மற்றும் பொதுச்சீரமைப்புகளுடன் செயல் தொடர்புகள் 28
சமூக மற்றும் தார்மீகச் செயல் 29
அரசியல் செயல்பாடு 30
வெளியுறவு தகவல் தொடர்புகள் 31
சுற்றுச்சூழல் 32

**மேற்கோள்**
கொள்கைகளும் மேல் விபரங்களும் 33
தொடர்புகள் 34

# முன்னுரை

## ரிச்சர்ட் கஸின்ஸின் செய்தி



உலகின் சிறந்த உணவு மற்றும் அதைச்சார்ந்த சேவைகள் அளிக்கும் நிறுவனம் என்ற வகையில், நாம் அளிக்கும் சேவைகள் மற்றும் தொழிலை நடத்தும் விதத்தின் தரத்தை மிக்க உயர்ந்ததாக நிர்ணயித்திருக்கிறோம். நீங்கள் பணிபுரிவது யூரெஸ்ட் (Eurest), இஎஸ்எஸ். (ESS), ரெஸ்டாரண்ட் அஸ்ஸோஸியேட்ஸ் (Restaurant Associates), மெடிரெஸ்ட் (Medirest), மார்ரிஸன் (Morrison), ஜிஆர்எஸ்ஏ (GRSA), சார்ட்வெல்ஸ் (Chartwells),ஸோஃப்ரா யேமெக் (Sofra Yemek) அல்லது Compass Group PLC - இன் வேறு எந்த அங்கத்தினரின் நிறுவனத்திலாகட்டும், உங்கள் செயல்கள் மற்றவர்களால் நாம் மதிப்பிடப்படுவதைப் பாதிக்கக்கூடும். நம்முடைய வெற்றியும் எதிர்காலமும், தொழில் நெறி, பொறுப்பு மற்றும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையில் நிர்ணயிக்கப்பட்ட தரங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப பணிபுரியும் நம் ஒவ்வொருவரையும் சார்ந்து இருக்கின்றன.

தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தை, வாடிக்கையாளர்கள், சக பணியாளர்கள், முதலீட்டாளர்கள், விநியோகஸ்தர்கள், மற்றும் துணை ஒப்பந்தக்காரர்கள் தவிர பரந்த சமூகத்தினர்கள் - ஒவ்வொருவரையும் - நாணயம், நேர்மை மற்றும் கௌரவத்துடன் நடத்தி; தொழிலை எவ்விதம் நேர்மையுடன் நடத்த வேண்டும் என்ற நம்முடைய கடமையை நிர்ணயிக்கிறது.

Compass Group - இன் ஒவ்வொரு நபரும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பில் நிர்ணயித்துள்ள அளவுகோல்களின்படி பணிபுரியவும், நம் தொழிலை தொழில் நெறி, பாதுகாப்பு, ஒழுங்கு நெறி மற்றும் பொறுப்பின் அடிப்படையில் நடத்தவும் பொறுப்பை பகிர்ந்து கொள்கிறார். இதில் விதி விலக்குக்கோ அல்லது விட்டுக் கொடுத்தலுக்கோ இடம் இல்லை. தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு இணக்கத்திற்கான நமது கொள்கைகளையும் ஒழுங்கு நெறிப் பிரச்சினைகளையும் ஒன்று சேர்க்கிறது மற்றும் குரூப்பிலுள்ள அனைத்து ஊழியர்களாலும் பின்பற்றப்பட வேண்டியது. தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்புடன் நீங்கள் உங்களை பரிச்சயப்படுத்திக்கொள்வதை தயவு செய்து உறுதி செய்து கொள்ளவும்.

தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு நம்முடைய நம்பிக்கைகள் மற்றும் பண்புகளின் அடிப்படையில் அமைந்தது மட்டுமல்லாது நம் தொழிலை அப்பண்புகளின்படி நடத்தும் நமது கடப்பாடையும் விளக்குகிறது. தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு, குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் என்ன செய்வது என்று உறுதியாகத்தெரியாத போது அல்லது தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு மீதுள்ள அக்கறையால் அது மீறப்படும்போது சம்பந்தப்படாத யாருடனும் அந்தரங்கமாக பேச நிறுவன ஊழியர்களை அனுமதிக்கும் Compass - இன் Speak Up திட்டத்தையும் குறிக்கிறது. “குரல் கொடுக்க” நம் எல்லோருக்கும் பொறுப்பு உள்ளது.

தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு Compass Group PLC யின் இயக்குனர்கள் குழு மற்றும் முதிய தலைமைக்குழுவினர்களால் முழுமையாக ஆதரிப்பட்டது.

Richard Cousins

**ரிச்சர்ட் கஸின்ஸ்**
குழுமத் தலைமை நிர்வாகி
பிப்ரவரி 2011

---

**கே: நமக்குத் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு ஏன் தேவை?**

ப: எங்கு நாம் செயல்பட்டாலும் மிக உயர்ந்த தரங்களைப் பெறுவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் உள்ள நம்முடைய கடமையின் விளக்கம் தான் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு. Compass தன் ஊழியர்கள், தொழிற்பங்காளிகள் மற்றும் விநியோகஸ்தர்களிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு நிர்ணயிப்பதோடு உலகமுழுவதும் தங்கள் அன்றாட அலுவல்களில் Compass ஊழியர்கள் Compass பண்புகளோடு எவ்விதம் வாழ வேண்டும் என்பதற்கும் வழிமுறைகளை அளிக்கிறது.

**கே: பல்வேறு நாடுகளில் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு எவ்விதம் செயல்படுகிறது?**

ப: உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் செயல்படும் சர்வதேச தொழில் நிறுவனம் என்ற முறையில், சட்டங்களும் விதிமுறைகளும் நாட்டுக்கு நாடு, அல்லது மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும் என்பதை Compass உணர்ந்துள்ளது. நாம் பணிபுரியும் நாட்டின் சட்டங்களுக்கு ஏற்ப நடப்பதை உறுதிப்படுத்துவதில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும். தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் வழிகாட்டும் கொள்கைகளுக்கும் நீங்கள் வசிக்கும் நாட்டின் உள்ளூர் சட்ட திட்டங்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டால், இரண்டில் எது சிறந்த தரத்தைக் கொண்டுள்ளதோ அதை நீங்கள் பின்பற்றிச் செயல்படுத்த வேண்டும்.

# முன்னுரை

## தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு



Compass - ற்காக உழைக்கும் அனைவருக்கும், விதி விலக்கின்றி, தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தை பொருந்தும். பணி செய்யும் இடம், பதவி அல்லது முதன்மை தகுதி நிலை எதுவாயினும் இத்தொகுப்பு தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்யும் ஊழியர்கள் அனைவருக்கும் பொருந்தும். தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் உள்ளடக்கத்தைப் பற்றி நாம் அறிந்து வைத்திருப்பது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு மட்டுமல்ல, அதில் எதைப்பற்றியாவது நிச்சயமாகத் தெரியாவிடில், உங்கள் நேர் மேலாளரிடம் அது பற்றி பேசவும். நம் பணிப் பொறுப்புகளில் நம்மிடம் எதிர்பார்க்கப்படுவது பற்றியும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையில் உள்ள கொள்கைகள் நமக்கு எவ்வாறு பொருந்தும் என்பது பற்றியும் நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும்.

மேலும் Compass ஊழியர்களான நாம், ஒப்பந்தக்காரர், முகவர், ஆலோசகர், வினியோகஸ்தர், சேவை பெறுனர், வாடிக்கையாளர், தொழில் பங்காளி அல்லது வேறு மூன்றாவது தரப்பு நபர் ஆகிய எவருடனும், அவருடைய தொழில் செயல்முறை நம் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையுடன் முரண்பட்டால், தொழில் செய்தல் கூடாது.

நீங்கள் மூன்றாவது தரப்பு நபரை Compass - இன் சார்பாக ஏற்பாடு செய்தால், அவர்கள் நமது தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தைப் பற்றி அறிந்து கொள்வதையும் அதன்படி நடக்க ஒப்புக்கொள்வதையும் உறுதிப்படுத்திக்கொள்வது உங்கள் பொறுப்பு. எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் நமது தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தைக்கு அவர்கள் இணங்கும்படி ஒப்பந்த வாக்குறுதியை நீங்கள் நாட வேண்டும், அதோடு அந்த மூன்றாவது தரப்பு நபர் அதற்கு ஏற்ப தொடர்ந்து நடப்பதை அவர்கள் உறுதிப்படுத்துவதற்கு விடாமுற்சியுடன் நீங்கள் முயல வேண்டும். மூன்றாவது தரப்பு நபர்கள் நமது தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையை மீறுதல் அல்லது Compass பண்புகளுக்கு (பின்பு குறிப்பிடப்படும்) ஒவ்வாத அவர்களின் சீரற்ற நடத்தை உதாரணங்கள் உங்கள் நேர் மேலாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இத்தகைய நடத்தையைக் களைய நீங்கள் முயல வேண்டும் மற்றும் எங்கு தேவையோ, அங்கே அவர்கள் உறவை முறித்துக்கொள்ளவும் வேண்டும்.

மேலும், வேலைக்கு தொழில் நெறி அறிவுரைஞர்கள் அல்லது ஆலோசகர்களை அமர்த்துவதற்கு முன் குழுமத்தின் ஒப்புதல்கள் கையேட்டின்படி அனுமதி தேவை என்பதை தயவு செய்து கருத்தில் கொள்ளவும். ஆலோசகர்களோ அல்லது தொழில் நெறி அறிவுரைஞர்களோ இந்த முன் அனுமதி பெறாமல் பணியில் அமர்த்தப்படக்கூடாது.

எந்த நாடுகளில் நாம் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளோமோ, அங்கு முழுத்தொழில் முயற்சியும் நம்முடையதே என்ற மனோபாவத்துடன் நமது தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பைச் செயல் படுத்த முயல வேண்டும் மற்றும் ஒத்த கொள்கைகளை நமது தொழில் கூட்டாளிகளும் சுவீகரிக்க சுறுசுறுப்பாய் முயலவேண்டும்.

அனைத்து ஊழியர்களும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு மற்றும் அதில் அடங்கிய கொள்கைகளைப் பின்பற்றி நடக்கக்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் (Compass Group - இல் கையகப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது ஒப்பந்தங்கள் வெற்றியினால் சேரும் புதிய ஊழியர்கள் உள்பட). தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பைப் பின்பற்றாமலிருப்பது, வேலை நீக்கம் வரை மற்றும் அது உள்பட, ஒழுக்க நடவடிக்கைகள் உங்கள் மீது எடுக்கப் பட வழி வகுக்கும்.

COMPASS GROUP · Chartwells · Crothall Services Group · Eurest · Eurest Services · ESS Support Services Worldwide · MEDIREST · Restaurant Associates · Scolarest

---

*Compass - இல் சக பணியாளர்களை மேற்பார்வையிடவோ அல்லது மேலாண்மை செய்யவோ உங்களுக்குப் பொறுப்பிருந்தால், பின்வருபவைகளை உறுதி செய்துகொள்ள உங்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் உண்டு:*

- *உங்கள் நேரிடை பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு நல்ல முன் மாதிரி மற்றும் எடுத்துக்காட்டாக, ஒழுங்கு நெறியுடன் நடந்து கொள்வீர்கள்;*
- *உங்கள் நேரிடை பணியாளர்கள் அனைவரும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையை அறிந்திருப்பதோடு தங்கள் பங்கிற்கு அது எவ்விதம் பொருந்தும் என்பதை விவாதிக்க வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் - மற்றும் உண்மையில், அவர்களுக்கு பிரச்சினைகள் ஏதும் இருக்குமேயானால்-இதை அவர்களுடைய வருடாந்திர மதிப்பீட்டின் ஒரு பகுதியாக ஆக்குவதற்கு எண்ணலாம்; மேலும்*
- *தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு நேரிடை பணியாளர்களால் உண்மையில் பின்பற்றப்படுகிறது - குறிக்கோள்களையும் பணித்திட்டங்களையும் அமைக்கும்போது இதை நினைக்கவும் மற்றும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தை மீறல் பற்றி அறிய நேர்ந்தவுடன் உங்கள் நேர் மேலாளரிடமோ அல்லது உங்கள் அலுவலக சட்டத்துறையிடமோ உடனுக்குடன் தெரிவிப்பதன் மூலம் செயல்படவும்.*

# முன்னுரை

## உதவியும் அறிவுரையும் பெறுதல்

நெறிமுறைகளுக்கு ஒவ்வாத நடத்தையைக் கண்டு அமைதியாக இருப்பதை அல்லது அதை தவிர்ப்பதை எளிதாக உணரலாம் என்றாலும் நேர்மைக்கான நமது கடமை என்னவென்றால் கவனிக்கப்படவேண்டிய சட்ட அல்லது ஒழுங்குப் பிரச்சினையை நம்மில் எவரும் அசட்டை செய்யலாகாது.

தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தை மீறப்படும் சாத்தியம் பற்றியோ அல்லது நிஜ மீறல்களையோ அல்லது Compass -இன் பண்புகளுக்கு ஒவ்வாத எந்த ஒரு நடத்தை பற்றியோ முறையிடுவது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும். இந்த கடமை உங்களுக்கும், நீங்கள் அறிய நேர்ந்த Compass உடன் தொடர்புடைய மூன்றாம் தரப்பு நபர் அல்லது சக பணியாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கும் பொருந்தும்.

இன்ற போது, முதலில் சட்ட அல்லது தொழில் நடத்தைப் பிரச்சினை எதுவானாலும் அதனைக் குறித்து உங்கள் நேர் மேலாளரிடம் பேசுவது நல்லது.

உங்கள் நேர் மேலாளரிடம் பேச அசௌகரியமாக இருந்தால் அல்லது சூழ்நிலைகளுக்குப் பொருந்தாவிடில், கீழே குறிப்பிட்டுள்ள அமைப்பிடம் அறிவுரையோ வழிகாட்டலோ பெறலாம்:

- உங்கள் வட்டார சட்டக்குழு;
- குரூப் சட்ட இலாகா;
- உங்கள் மனித வளக்குழு;
- குரூப் உள் தணிக்கை; அல்லது
- உங்கள் துறை மூத்த மேலாண்மைக் குழு.

33ம் பக்கத்தில் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் முடிவில் உங்களுக்கு உதவக்கூடிய தொடர்பு தகவல் அடங்கிய மேற்கோள் பகுதியைக் காணலாம்.

பக்கம் 6ல் காணப்படும் விவரங்கள் குறிப்பிடும் நம் (ஸ்பீக் அப்) **Speak Up** வசதியையும் நீங்கள் பயன் படுத்தலாம்.

COMPASS GROUP · Chartwells · Crothall Services Group · Eurest · Eurest Services · ESS Support Services Worldwide · MEDIREST · Restaurant Associates · Scolarest

---

**கே: தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பு நான் அறிய வேண்டியது அனைத்தும் அடங்கியதா?**

ப: உங்கள் பதவிக்காலத்தில் எழக்கூடிய சந்தர்ப்பங்களின் உதாரணங்களையும், அவற்றுடன் அத்தகைய சந்தர்பங்களில் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று Compass எதிர்பார்க்கிறது என்ற வழிகாட்டலையும் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தை முழுவதும் நீங்கள் காண முடியும். ஆயினும் அவ்வப்போது நிகழக்கூடிய சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் குறிப்பிடுவது இயலாத செயலாகையால், உலகின் முன்னணி நிபுணத்துவ நிறுவனம் என்ற வகையில், Compass அதன் ஒவ்வொரு ஊழியரும் தன் சுய பொறுப்பில் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் கொள்கைகளுக்கேற்ப நடப்பதை எதிர்பார்க்கிறது.

"கேள்விகளும் பதில்களும்", உங்களுக்கு எழக்கூடிய குறிப்பிட்ட கேள்விகளுக்கும், நீங்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை நாங்கள் விரும்புவதை பொதுவாக விளக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

# முன்னுரை



## Speak Up

**“Speak Up”** என்பது Compass -இல் உள்ள குழுமம் முழுவதும் பரவியுள்ள நம்மைச் சேர்ந்தவர்கள், முறையற்றது, பாதுகாப்பற்றது, ஒழுங்கற்றது அல்லது சட்டத்திற்கு புறம்பானது என்று அவர்கள் கருதும் செயல்கள் மற்றும் நடத்தை மீதான அவர்களுடைய பிரச்சினைகளை; தங்கள் நேர் மேலாளர் அல்லது வழக்கமான நடைமுறைகள் மூலம் எழுப்ப முடியாது என்று அவர்கள் கருதும் பிரச்சினைகளை அந்தரங்கமாக எழுப்புவதற்கான ஒரு வசதியாகும். ஊழியர்கள் இதை, நாளொன்றின் 24 மணி நேரங்களும், வாரத்திற்கு 7 நாட்களும் சுயேச்சை சிறப்புச்சேவை அளிப்பாளர் நடத்தும் அந்தரங்கமான ஒரு தொலைபேசி உதவி இணைப்பு மற்றும் இணைய தளம் மூலம் செய்ய முடியும்.

நம் நிறுவனத்தின் நற்பெயர் நாம் அளிக்கும் தரமுள்ள சேவைகளுக்குக்காக நாம் நிர்ணயித்த அளவுகோல்கள்; நம் இயக்கக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல் முறைகள்; தவிர நம் ஒழுங்கு நெறிகள் மற்றும் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது. இந்த அளவுகோல்கள் விட்டுக்கொடுக்கப்பட்டால், நாம் நமது நற்பெயருக்கு உலை வைத்து, தொழிலின் பாதுகாப்பையும் எதிர்கால வெற்றியையும் ஆபத்திற்கு உள்ளாக்குவோம். இது ஏற்படுவதற்கு நாம் அனுமதிக்க முடியாது. நம் தொழிலை தொழில் நெறிமுறையுடன், பாதுகாப்பாக, ஒழுங்கு நெறி மற்றும் சட்டரீதியில் நடத்த நாம் அனைவரும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்வோம்.

இதை அடைவதற்கான வழி, இந்த அளவுகோல்களை மீறுவதாகவும், அவர்களையும், சக பணியாளர்களையும், சேவை பெறுநர்கள், வாடிக்கையாளர்கள், நமது தொழில் மற்றும் நற்பெயர் ஆகியவற்றைப் பாதிக்குமென்று அவர்கள் நினைக்கும் செயல்கள் அல்லது நடத்தை பற்றி நம்மைச் சேர்ந்தவர்கள் தங்களால் தங்கள் நேர் மேலாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்களிடம் அவர்களால் எழுப்ப இயலும் என்று உணர்ந்து செய்யும் வெளிப்படையான, நேர்மையான கருத்து பரிமாற்ற பண்பு.

நம்மிடம் இந்த பண்பு உள்ளது என்று நாம் நம்பினாலும், நம்மைச்சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் இந்த பிரச்சினைகளின் மீது “குரல் கொடுக்க” அதிகாரம் உள்ளவர்கள் என்று தம்மை உணர்வதை உறுதிப்படுத்திக்கொள்ள நாம் விரும்புகிறோம். ஆயினும், அது எப்போதும் அவ்வளவு எளிதல்ல. காரணம் எதுவாயினும், சில சமயங்களில் ஜனங்கள் தங்களால் ”குரல் கொடுக்க” இயலாது என்று உணர்கிறார்கள்.

நம்மைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்கள், சக பணியாளர்கள், அல்லது நம் சேவை பெறுநர்கள், வாடிக்கையாளர்கள், மற்றும் நமது தொழில் கூட்டாளிகளின் பாதுகாப்பு, அளவுகோல்கள் அல்லது நம் நற்பெயர் பாதிக்கப்படும் என்று எங்கு அவர்கள் உணர்கிறார்களோ அது குறித்த அவர்கள் பிரச்சினைகளை எழுப்ப ஒரு அந்தரங்கமான வழியை **Speak Up** திட்டம் அளிக்கிறது.

அனைத்து பிரச்சினைகளும், Compass Group -இன் ஊழியர்களல்லாத, சுயேச்சை வல்லுநர்களால் கையாளப்படுகின்றன. **Speak Up** உடனான தொடர்பு முற்றிலும் அந்தரங்கமானது, மற்றும் நீங்களாக விரும்பினால் அன்றி, உங்களுடைய விபரங்களை அளிக்கத்தேவையில்லை  என்றாலும் உங்கள் சுய விபரங்களைத் தருவது முழுப்புலன் விசாரணை செய்ய உறுதி அளித்து அதிகமாக உதவும். முறையீடு சிறப்புப்பயிற்சி பெற்ற ”வழக்கு மேலாளருக்கு” அனுப்பப்பட்டு, அவர் முறையிடப்பட்ட பிரச்சினை மீது அந்தரங்க புலன் விசாரணை நடத்துவார்.

பல நாடுகளில் **Speak Up** உதவி இணைப்பு ஒன்றுக்கும் மேற்பட்ட மொழியில் அமைக்கப்பட்டுள்ளது, உ.ம். கஸக்ஸ்தான், கஸக், ரஷ்ய மற்றும் ஆங்கில மொழிகளில் இங்கு தொலைபேசி உதவியாளர்கள் உண்டு.

பின்னூட்டம் அல்லது நிகழ்நிலை அறிக்கை பெற நீங்கள் விரும்பினால், உங்கள் முதல் அறிக்கை தயாரிக்கப்பட்ட சுமார் 14 நாட்களுக்குப்பிறகு பிரத்தியேக அடையாள எண்ணை உபயோகித்து நீங்கள் **Speak Up** ஐ மறு தொடர்பு கொள்ள முடியும். பிரச்சினை ஒன்றை முறையிடுவதால், அதை எழுப்புவதால் அல்லது புலன் விசாரணையில் உதவுவதால் தொடரும் பழிவாங்கும் நடவடிக்கையை Compass பொறுத்துக்கொள்ளாது. நன்னம்பிக்கையின் அடிப்படையில் பிரச்சினைகளை எழுப்பும் எந்த ஒரு நபர் மீதும் அதனால் எதிர் தாக்குதலை எவராவது நடத்துவதாகத் தெரிந்தால், அந்த நபர் ஒழுக்க நடவடிக்கைக்கு உட்படுவார்.

---

**கே. என் மேலாளர் நான் சரியென்று எண்ணாத ஒன்றை செய்யச் சொல்லி இருக்கிறார். இது குறித்து நான் அவரிடம் விவாதிக்க முயன்றும் அவர் அதைச் செய்யச்சொல்லி இருக்கிறார். என் மேலாளர் எனக்குத் தொந்திரவு கொடுக்கக்கூடும் அல்லது இது குறித்து Speak Up ஐ நான் விளித்தால் என் வேலையை இழக்க நேரிடும் என்று நான் கவலையுற்றிருக்கிறேன்.**

**ப**: உங்களை பாதிக்கும் பிரச்சினை ஒன்றை நீங்கள் அறிய நேர்ந்தால் நீங்கள் யாரிடமாவது அது குறித்துப்பேசுவதை நாங்கள் எப்போதும் ஊக்குவிப்போம். உங்கள் நேர் மேலாளரிடமோ அல்லது மற்ற மூத்த சக பணியாளர்களிடம் இது குறித்துப்பேச உங்களால் முடியாவிட்டால், நீங்கள் Speak Up ஐ விளிக்க நாங்கள் பரிந்துரைக்கிறோம். நீங்கள் முறையிடும் அல்லது எழுப்பும் எந்த பிரச்சினைகளும் புலன் விசாரணை செய்யப்படும் மற்றும் இது குறித்து நீங்கள் முறையிட்டதால் உங்களுக்கு எதிராக நடக்கும் தாக்குதலை நாங்கள் பொறுக்க மாட்டோம். நீங்கள் சரியானவற்றைச் செய்ய வேண்டும் மற்றும் இந்த விஷயத்தை முறையிட வேண்டும்.

*(Speak Up) திட்டம் குறித்த அதிக விபரங்களின் தொடர்பை 32ம் பக்கத்தில் உள்ள தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் காணலாம்.*

# நோக்கம் மற்றும் பண்புகள்

**great** people
**great** service
**great** results

நம்முடைய நோக்கங்களும் பண்புகளும் நம் Compass -இன் ஆன்மாவையும் கொள்கைகளையும் சொற்களில் வடிக்கின்றன. நம்மைச்சேர்ந்தவர்களின் முடிவுகள், செயல்கள் மற்றும் நடத்தைகளை அவை வழி நடத்துகின்றன; உலகமுழுவதும் ஒவ்வொரு நாளும் நாம் அளிக்கும் சேவையைப்பெறும் வாடிக்கையாளர்களின் அனுபவம் மூலம் தெரிய வருகின்றன; மற்றும் நம்முடைய செயல்திறனையும் வளர்ச்சியையும் அவை முன் செலுத்துகின்றன.

## நம் நோக்கம் - **நாம் எப்படி இருக்க விரும்புகிறோம் என்பதை நிர்ணயிக்கிறது**

*உலகத்தரம் வாய்ந்த ஒரு ஒப்பந்த உணவு சேவை மற்றும் அதைச் சார்ந்த சேவைகள் அளிப்போர், நம்மைச்சேர்ந்த சிறந்த மக்களுக்காக பெயர் பெற்றோர், நம் தலைசிறந்த சேவை, மற்றும் நம் சிறந்த பலன்கள்.*

## நம் குறிக்கோள் - **இதை எவ்வாறு அடையப்போகிறோம் என்பதை நிர்ணயிக்கிறது.**

*நமது வாடிக்கையாளர்கள், பங்குதாரரர்கள் மற்றும் ஊழியர்களுக்காக பகிர்ந்து கொள்ளப்படும் பயன்களுக்காக,* Compass *-இல் உள்ள ஒவ்வொருவரும் மிகச்சிறந்த சேவையை தலை சிறந்த விதத்தில் சீராக அளிப்பதில் கடமைப் பட்டுள்ளார்கள்.*

## நம்மை வழி நடத்தும் கொள்கைகள் - நம் முடிவெடுக்கும் திறமையை வழி நடத்தும் கொள்கைகளை இவை நிர்ணயிக்கின்றன.

***முதலில் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல்** - நம் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் உடல் நலம் மற்றும் பாதுகாப்பை ஒரு போதும் சமரசம் செய்தல் கூடாது, மற்றும் சுற்றுச்சுழலில் நம் தொழிலின் பாதிப்பைச் சமாளிக்க வேண்டும்;*

***வாடிக்கையாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் வினியோகித்தல்** - தரம், சேவை, மதிப்பு மற்றும் புதியனவற்றுக்கு முதல் விருப்பமாக ஏன் நாம் இருக்கிறோம் என்பதை அவர்களுக்கு சீராக விளக்கி , நம் வாடிக்கையாளர்களின் தொடர்ந்த விசுவாசத்தை சம்பாதித்தல்;*

***நம்மைச் சேர்ந்தவர்களை மேம்படுத்துவது மற்றும் மாறுபாட்டை மதிப்பது** - மாறுபாட்டையும் நம்மைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பையும் அங்கீகரித்தல். சவாலாகவும் ஒவ்வொருவருக்கும் முன்னேறவும், கற்கவும் மற்றும் வெற்றி பெறவும் வாய்ப்புகளும் ஆதரவும் அளிக்கும் பணிச்சூழலை நாம் உருவாக்குகிறோம்;*

***லாபகரமான வளர்ச்சி** - பங்குதாரர்களுக்கு அவர்களுக்குரிய பங்குகளின் மதிப்பை கட்டுப்பாடு, தொடர்ச்சியான வளர்ச்சி, வலுவான நிர்வாகதின் ஆதரவு மூலம் அளிப்பது நம்முடைய உலகளாவிய பலன்களை உயர்த்துவதில் பங்கேற்கிறது; மற்றும்*

***செயல் திறனிலும், திறமையிலும் தொடர்ந்த கவனம்** - தளராமல் மிகக்குறைந்த விலையில் அளிக்கவும், மிகச்சிறந்த திறமையுடன் சேவைகலை அளிக்கவும் முயலும்போதே சிறந்த தரம் மற்றும் செயல்பாட்டை அளிப்பது.*

## நமது பண்புகள் - இவைகள் ஒன்று சேர்ந்து நம் எதை நம்புகிறோமோ அதை நிர்ணயிக்கின்றன மற்றும் நமது நடத்தைகளை வழி நடத்துகின்றன.

***ஒளிவு மறைவற்ற தன்மை, நம்பிக்கை மற்றும் நேர்மை** - எல்லா நேரங்களிலும் தலை சிறந்த ஒழுங்கு நெறி மற்றும் தொழில் நெறி அளவுகளை நாம் நிர்ணயிக்கிறோம். நம் உறவு முறைகள் யாவும் நாணயம், மரியாதை, மற்றும் நியாயத்தின் அடிப்படையில் இருப்பதையும் மனம் திறந்த விவாதம் மற்றும் ஒளிவு மறைவற்ற தன்மைக்குக் கட்டுப்படுதலையும் நாம் விரும்புகிறோம்.*

***தரத்தின் மீது தீவிர ஆர்வம்** - மிகச்சிறந்த தரமுள்ள உணவு மற்றும் சேவை அளிப்பதில் நாம் தீவிர ஆர்வம் கொண்டுள்ளோம் என்பதோடு இதை அடைவதில் பெருமிதம் கொள்கிறோம். வெற்றியை பெருக்குவதையும், தவறுகளிலிருந்து கற்கவும், மற்றும் நமது சந்தையை முன்னேற்றவும் வளப்படுத்தவும் உதவும் எண்ணங்கள், புதுமைகள், பழக்கங்களை மேம்படுத்துதலையும் நாம் எதிர்பார்க்கிறோம்.*

***குழுவாய் செயல்படுதல் மூலம் வெற்றி அடைதல்** - நாம் தனி நபர் உரிமையை ஊக்குவிக்கிறோம், ஆனால் ஒரு குழுவைப்போல் செயல்படுகிறோம்; நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாகப்பணி புரிந்து கொண்டும் பகிர்ந்து கொண்ட குறிக்கோள்களைப் பின்பற்றியும், அறிவு நுட்பம், தனித்துவம் மற்றும் அனைத்து சக பணியாளர்களின் பங்களிப்பை மதிக்கிறோம்;*

***பொறுப்பு** - நம் செயல்களுக்கு, தனித்தனியாகவும், ஒரு குழுவாக மொத்தமாகவும் நாம் பொறுப்பேற்கிறோம். ஒவ்வொரு நாளும், எங்கும் நமது வாடிக்கையாளர்கள், நாம் பணிபுரியும் சமூகங்கள் மற்றும் நாம் வாழும் உலகத்தின் ஆரோக்கியத்திற்காகவும், நலனுக்காகவும் சாதகமான பங்களிப்பை அளிக்க எதிர் நோக்குவோம்.*

***முடியும்** - நாம் எதிர் நோக்கும் வாய்ப்புகள் மற்றும் சவால்களை சமாளிக்க "முடியும்" என்ற நேரிடை மற்றும் வர்த்தக உணர்வுடன் அணுகுவோம்.*

---

*சரியான நடவடிக்கை எடுக்கத் தயங்கும் ஒரு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கும்போது, பின்வரும் கேள்விகளை உங்களுக்குள் கேட்பது:*

1. *இந்தச் செயல் சட்டப்படியானதா?*
2. *இது* Compass *-இன் பண்புகளுக்கு உகந்ததா?*
3. *இது நம் வழிகாட்டல் கொள்கைகளுக்கு முரண்பட்டதா?*
4. *மற்றவர்கள் இதைப்பற்றி என்ன நினைப்பார்கள்? மேலும்*
5. *இது பத்திரிகையில் வெளியானால் நீங்கள் பிரச்சனையின்றி உணர்வீர்களா?*

*இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் சிந்தித்த பிறகும் உங்களுக்கு பிரச்சினைகள் இருந்தால், உங்கள் நேரடி மேலாளர், வட்டார மனிதவளக்குழு அல்லது வட்டார சட்டக்குழுவிடம் இருந்து வழிகாட்டல் பெற மறுக்காதீர்கள்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* **SpeakUp** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# நோக்கம் மற்றும் பண்புகள்



Compass தனது சிறந்த உணவு மற்றும் சேவைக்காக தனக்குள் பெருமைப்படுகிறது. நாம் உலகின் தலைசிறந்த சமையல்கலை வல்லுனர்கள் சிலருடன் பணிபுரிகிறோம் மற்றும் நம் தொழிலில் தலைசிறந்தவர்கள் என்று நாம் எண்ணும் நபர்களைப் பணிக்கு அமர்த்தியிருக்கிறோம்.

நம் சமையல்கலை வல்லுனர்கள் தயாரிக்கும் உணவுப் பட்டியல்கள் மற்றும் உணவுப்பொருட்கள் உயர்ந்த தரம், ஊட்டம் மற்றும் சீர் மிக்க உணவுப் பொருட்களை தெரிவு செய்ய வழி வகுக்கிறது. . நம் புதுமை புகுத்தும் தன்மை நம்மை சந்தையின் தலைவராக ஆக்கியுள்ளது. மிகத்திறமையான வழியில் தொடர்ந்து நாம் உயர்ந்த தரத்தை அளிக்க ஓய்வின்றி உழைக்கிறோம்.

## உணவுப் பாதுகாப்பு

நம்முடைய முதல் கவலை நாம் அளிக்கும் உணவு மிக உயர்ந்த தரங்களுக்கேற்ப, நல்ல தரமுள்ள பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும் என்பதே. மிகக்குறைந்த பட்சம், உரிய அனைத்து உணவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செய்முறைத் தொகுப்புகளுக்கு இணங்க நாம் நடப்போம்.

சிறந்த நடைமுறையை உறுதி செய்ய, நாம் செயல்படும் ஒவ்வொரு இடத்திலும் கட்டாயம் செயல்படுத்த வேண்டிய பொதுவான குறைந்தபட்ச செயல்பாட்டுத்தரம் மற்றும் நடத்தைகளின் தொகுப்பை நாம் உருவாக்கியுள்ள்ளோம். இவைகள் உறுதியான அறிவியல், சீரமைப்புத் தேவைகள் மற்றும் தொழிலின் சிறந்த நடைமுறையை அடிப்படையாகக் கொண்டவை.

நம் சேவை பெறுனர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நாம் அவர்களுடைய தரத்தின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் அதே நேரத்தில் உண்ணுவதற்கு பாதுகாப்பான உணவையும் அளிக்கிறோம் என உறுதி கொடுக்க இந்த அளவுகோல்களுக்கான இணக்கத்தை நாங்கள் ஒழுங்காக அளவிடுகிறோம் மற்றும் செயல்பாட்டுக் குறிக்கோள்களை அமல் படுத்துகிறோம்

உணவுடன் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் பின்வருவனவற்றை உறுதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறார்கள்:

- தூய்மைக்கேடிற்கான அபாயத்திற்கு உள்ளாவதைத்தடுக்கும் சுகாதாரமான நிலைமைகளில் எப்போதும் உணவு தயாரிக்கப்படுகிறது;
- அவர்கள் பணியை சுகாதாரம் மற்றும் இணக்க ரீதியில் புரியத் தேவையான தகவல்கள், பயிற்சி மற்றும் கருவிகள் அவர்களுக்கு அளிக்கப்படுதல்; மற்றும்
- நிறுவனத்தின் அனைத்து உணவுப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் செயல் முறைகளுக்கு இணங்க அவர்கள் நடத்தல்.

இந்த அளவுகோல்களின் இணக்கத்திற்கும் உறுதி செய்வதற்கும் நிர்வாகம் நம் ஊழியர்களின் மேற்பார்வையை மேற்கொள்கிறது.

---

**கே: என் சக ஊழியப்பெண் ஒருவர், சில சமயங்களில் உணவு தயாரிக்கும் முன் கைகளைக் கழுவ மறந்து விடுகிறார். அவரிடம் நான் ஏதாவது சொல்லவேண்டுமா?**

ப: உங்கள் கைகள் நுண்கிருமிகளை எளிதாக சமையல் அறையிலும் உணவுப்பொருட்கள் மீதும் பரப்பக் கூடுமாகையால், எப்போதும் நீங்கள் உணவு தயாரிக்கும் முன் அல்லது தயாரித்த பின், குளியலறைக்குப்போய் வந்தபின் அல்லது குப்பைக்கூடைகள்/கழிவுத்தொட்டிகளைத் தொட்ட பின், உங்கள் கைகளை சுத்தமாகக் கழுவ வேண்டியது உண்மையிலேயே அவசியம். உங்கள் சக ஊழியருக்கு தயவு செய்து இதை ஞாபகப்படுத்தவும் மற்றும் தேவையெனில், இதை உங்கள் நேர் மேலாளரிடம் எழுப்பவும்.

*நமது உணவு பாதுகாப்பு கொள்கை அறிக்கைக்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் மேற்கோள்கள் பகுதியில் காணலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# Compass வழி

## பொறுப்புள்ள வினியோகத் தொடர்

உலகமுழுதும், ஒரு குரூப் என்ற முறையில், Compass பெரிய சர்வதேச நிறுவனங்களின் பரந்த பலதரப்பட்ட வினியோகஸ்தர்களிடமிருந்தும், வட்டார சிறப்பு வினியோகஸ்தர்களிடமிருந்தும் பொருட்களையும் சேவைகளையும் விலைக்கு வாங்குகிறது.

எங்கு இயலுமோ, உணவு மற்றும் உட்பொருட்களை நேரடியாக அவற்றின் வட்டார உற்பத்தி மற்றும் தயாரிப்பாளர்களிடமிருந்தும், இயற்கை சார் பொருட்கள் உற்பத்தியாளர்களிடமிருந்தும் நமது வட்டார தொழிலகங்களுக்கு வாங்குகிறோம் மற்றும் நியாய வர்த்தக முயற்சிகளில் பங்கு பெறுகிறோம். தொடர்ச்சியான கொள்முதலை நாம் அதிகமாக வலியுறுத்துகிறோம்.

பெரிய சர்வதேச நிறுவனங்களிடம் எதிர்பார்க்கும் தரங்களை தங்களால் நிறைவேற்ற சிரமப்படும் சில நாடுகளின் வினியோகஸ்தர்கள் இருக்கக்கூடும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அத்தகைய சந்தர்ப்பங்களில், அம்மாதிரியான வினியோகஸ்தர்கள் Compass -இன் சிறிய/நடுத்தர நிறுவனத்திற்கான தணிக்கை தேவைகளை நிறைவேற்றுவதையும் மற்றும் தொடர்ந்த மேம்பாட்டை அவர்கள் அடைந்து காட்டுவதையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

குறைந்த பட்சம், எந்த நாடுகளில் தொழில் செய்கிறோமோ, அவற்றின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம், பாதுகாப்பு அளவுகோல்கள், நடைமுறை தொகுப்புச்சட்டங்கள், நிறுவன விதி முறைகள், சட்டங்கள் மற்றும் தரங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப நமது கொள்முதல் செயல்பாடுகள் அமையும் மற்றும் தற்போது அமலில் உள்ள தொடர்ச்சியான உணவுக் கொள்முதலையும் மற்றும் கூட்டுப்பொறுப்பையும் (“CR”) பிரதிபலிக்கும்.

Compass, பண்புகள் மற்றும் நடத்தையின் அடிப்படையிலமைந்த நீண்ட-கால வினியோக உறவுகளை உருவாக்குவதற்கும் தரம் மற்றும் விலை இவற்றின் இடையில் சரியான அளவைக் காண தொடர்ந்து முயல்கிறது.

வினியோகஸ்தர்கள் பாரபட்சமற்ற ஏலம் (கோரல்) மற்றும் அளித்தல் (ஒப்பந்தப்புள்ளி) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் மற்றும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறார்கள். நம் வினியோகஸ்தர்களின் நேர்மறையான தேர்வு, சாத்தியமான வரையில், வினியோகஸ்தரின் கொள்கை மற்றும் செயல்கள் நல்ல கூட்டுப் பொறுப்பு (CR) நடைமுறைகளுடன் சம்பந்தப்பட்ட திறனாய்வை உள்ளிட்டது. நாம் நமது பெரிய வினியோகஸ்தர்கள் வலுவான கூட்டுப் பொறுப்பு ஒப்பீட்டு அளவுகோல்களை நிறைவேற்றுவதை மற்றும் சிறந்த நடைமுறைகளை தங்களுக்குள் அனைத்து வினியோகஸ்தர்களும் சுவீகரிப்பதை ஊக்குவிப்பதோடு உதவவும் செய்கிறோம் என்பதைத் தவிர நம் அனைத்து வினியோகஸ்தர்களும் சட்டத்தை மதித்து ஒழுக்க நெறிக்கோட்பாடுகளையும் அங்கீகரிப்பதையும் எதிர்பார்க்கிறோம்.

வினியோகஸ்தர்களை தேர்ந்தெடுப்பதிலோ அல்லது அவர்களுடன் பணி செய்வதிலோ உங்களுக்கு பங்கு இருக்குமேயானால் அவர்களைத் தேடித் தேர்வு செய்வதிலிருந்து பொருட்கள் வினியோகம் மற்றும் பணப்பட்டுவாடா வரை, உங்கள் உறவு பொறுப்புள்ள மற்றும் ஒழுங்கு நெறிமுறைக்கு உட்பட்ட வர்த்தகக் கொள்கைகளுக்கு ஏற்ப நடத்தப்படுவதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

குறைந்த பட்சம், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நடைமுறைக் கோட்பாடான ஒழுங்கு நெறிமுறை வர்த்தக அடிப்படை கோட்பாடின் பின்வரும் முக்கிய பகுதிகளுக்கு ஏற்ப நாம் நடப்போம்:

- கூடும் சுதந்திரம் மற்றும் ஒருங்கிணைந்த பேரம் மதிக்கப்படவேண்டும்;
- பணியிட நிலைமைகள் பாதுகாப்புடனும் சுகாதாரத்துடனும் இருத்தல்;
- குழந்தைப்பணி பயன்படுத்தப்படக்கூடாது;
- வாழ்வூதியம் அளிக்கப்படவேண்டும்;
- பணிநேரங்கள் குறிப்பிட்ட அளவிற்கு மேல் இல்லாமலிருத்தல்;
- வேற்றுமை பாராட்டப்படக்கூடாது.
- நிரந்தர வேலை அளிக்கப்பட வேண்டும்; மற்றும்
- கடுமையான அல்லது மனிதத்தன்மையற்ற முறையில் நடத்தல் கூடாது.

நம் கொள்முதல் மற்றும் வினியோகக் கொள்கை அறிக்கையைப் படிப்பதன் மூலம், வினியோகஸ்தர்களுடனான நம் பணியைப் பற்றி அதிக விபரங்களை நீங்கள் அறியலாம். இதற்கான இணைப்பு தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள்கள் பகுதியில் உள்ளது.

---

**கே: Compass உடன் வியாபாரம் செய்ய ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் வினியோகஸ்தர்களில் ஒருவர், வாய்ப்புள்ள மற்ற வினியோகஸ்தர்கள் எந்த விலையில் அளிக்க எண்ணியுள்ளார்கள் என்று நாம் அவருக்குத் தெரிவித்தால், நமக்கு அதிக சேமிப்பிற்கு உத்திரவாதம் அளிக்க முடியும் என்று சுட்டிக்காட்டுகிறார். தொலை நோக்கில் Compass -இன் நிதி நிலைமையைப் பொருத்தவரை இது ஒரு அருமையான செய்தியாகத் தோன்றலாம் எனினும் இது பற்றி நான் சிறிது அசௌகரியமாக உணர்கிறேன். நான் என்ன செய்வது?**

ப: இது பற்றி நீங்கள் அசௌகரியமாக உணர்வது சரி தான். ஏதாவதொன்று சரியென்று தோன்றவில்லை என்றால், அநேகமாக அது சரியாக இருக்காது தான். கம்பாஸின் சிறந்த நலன்களை எப்போதும் கருத்தில் கொள்வது முக்கியம் தானெனினும், நீங்கள் எப்போதும் ஏதாவதொரு வினியோகஸ்தரின் தகவல்களை மற்ற வினியோகஸ்தர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. இது அந்தரங்கதன்மை மீறல் மட்டுமல்ல, நீங்கள் சட்டத்தையும் உடைக்கக்கூடும். வினியோகஸ்தருக்கு, அவர் என்ன கருத்தை முன் வைத்தாரோ அது ஒழுங்கு நெறிமுறைக்கு அப்பாற்பட்டது என்றும் Compass -ஆல் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் நீங்கள் விளக்க வேண்டும். இந்த விஷயத்தை நீங்கள் உங்கள் நேர் மேலாளருக்குத் தெரியப்படுத்த வேண்டுவது மட்டுமல்ல இந்த வினியோகஸ்தருடன் நீங்கள் தொடர்ந்து தொழில் நடத்த விரும்புகிறீர்களா என்று எண்ணவும் விரும்பலாம்.

*நம் வினியோகஸ்தர்களின் நடத்தை குறித்தோ அல்லது வினியோகஸ்தர்களுடனான Compass -இன் ஏதாவது ஊழியரின் உறவு குறித்தோ உங்களுக்கு பிரச்சினை ஏதும் இருந்தால், உங்கள் நேர் மேலாளரிடமோ அல்லது வட்டார கொள்முதல் மேலாளரிடமோ பேசவும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# சுய நேர்மை

## ஆர்வ முரண்பாடுகள்



ஊழியர்கள் - உண்மையான அல்லது உணர்ந்த - ஆர்வ முரண்பாடுகள் கம்பாஸின் ஊழியர்கள் என்ற வகையில் அவர்கள் கடமை மற்றும் பணிக்கு வெளியே உள்ள எந்த ஆர்வங்களுக்கும் இடையில் எழாமல் இருக்க உறுதியுடன் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆர்வ முரண்பாடுகள் பல வழிகளில் எழலாம்:

**மற்ற பணி ஆர்வங்களும் சேர்க்கைகளும்: Compass -இல் ஊழியராய் இருந்துகொண்டே மற்ற நிறுவனங்களுக்காக பணி செய்தல் அல்லது மற்ற நிறுவனங்களுடனான சேர்க்கை ஆர்வ முரண்பாடுகளை உருவாக்கலாம். உதாரணத்திற்கு:**

- வேறொரு கம்பெனியில் அல்லது நிறுவனத்தில் நிதி ஆர்வம் கொண்டுள்ளது;
- ஒரு இயக்குனர் அல்லது ஆலோசகர் பதவி வகிப்பது;
- Compass -இன் பதவிக்கு மீறிய சேவைகள் அளிப்பது; அல்லது
- மற்றொரு வேலையிலும் இருப்பது.

மேற்கண்டவற்றில் ஒன்று Compass -இன் போட்டியாளர், அதன் வாடிக்கையாளர், ஒப்பந்தக்காரர் அல்லது வினியோகஸ்தரின் ஓர் கம்பெனி அல்லது நிறுவனத்துடன் பொருந்துமானால், ஆர்வ முரண்பாடு எழலாம்.

இது போன்ற ஏற்பாடுகள் எப்போதும் அனுமதிக்கப் படுவதில்லை - Compass -இல் உங்கள் பதவிக்கேற்ப உங்களுடன் செயல் தொடர்பு உள்ள எந்த கம்பெனி அல்லது நிறுவனத்திற்காகவும் உழைக்கவோ, அவர்களுக்கு சேவைகள் அளிக்கவோ கூடாது. உண்மையான அல்லது உணரப்படக்கூடிய ஆர்வ முரண்பாடு எழக்கூடிய கூடுதல் பணி ஒன்றை Compass -இன் வேலையைத் தவிர வெளியே ஏற்றுக்கொள்ள நீங்கள் எண்ணினால், இதை நீங்கள் உங்கள் நேர் மேலாளருக்குத் தெரிவிக்க வேண்டும் மற்றும் உங்கள் திட்டங்களைத் தொடர, அவர்கள் அனுமதியை எழுத்து மூலம் பெற வேண்டும்.

**நெருங்கிய உறவினர்களுடன் பணி செய்தல்: உங்களுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் நம் போட்டியாளர், வாடிக்கையாளர், ஒப்பந்தக்காரர் அல்லது வினியோகஸ்தருக்காக பணி செய்வதை அல்லது சேவைகள் அளிப்பதை நீங்கள் அறிய நேர்ந்தால், நீங்கள் அதைக்குறித்து உங்கள் நேர் மேலாளரிடம் விவதிக்க வேண்டும்.**

பொதுவான விதி என்னவென்றால், உங்கள் உறவினர் ஒருவர் உங்களுடனும், முடிந்தால் உங்கள் அலுவலக வட்டாரத்தில் எவருடனும் அல்லது உங்களுக்கு பதில் கூறக் கடமையுடைய எவருடனும் தொழில் சம்பந்தமான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளக்கூடாது. தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பைப் பொறுத்தவரை, வாழ்க்கைத்துணைவர், பங்காளி, பெற்றோர், மாற்று பெற்றோர், குழந்தை, மாற்றாந்தாயின் குழந்தை, கூடப்பிறந்தவர்கள், மாற்றுப் பெற்றோர் குழந்தைகள், மருமான், மருமகள், அத்தை, சித்தி, அத்தையின் கணவர், பெரியப்பா, சித்தப்பா, மாமன், மாமி, தாத்தா, பாட்டி, பேரக்குழந்தை அல்லது மாப்பிள்ளை/மாற்றுப்பெண் ஆகியவர்களை நாம் "நெருங்கிய உறவினராக" கருதுகிறோம்.

**இயக்குனர்கள் குழு**

தொழில் முறை நிறுவனம் என்ற முறையில், நம் ஊழியர்கள் சில சமயங்களில் மற்றொரு நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவில் பணி புரிய கேட்டுக்கொள்ளப் படலாம் அல்லது அழைக்கப்படலாம் என்பதை உணர்ந்திருந்தாலும், சில சந்தர்பங்களில், இது ஆர்வ முரண்பாடு அல்லது சட்டப் பிரச்சினை ஒன்றை எழுப்பலாம். எந்த நிறுவனத்தின் (லாப நோக்கற்றவை உள்ளிட்ட) இயக்குனர் குழு அங்கத்தினரில் ஒருவராக நீங்கள் பொறுப்பை ஒப்புக்கொள்ள நினைத்தாலும், அதற்கு முன், உங்கள் நாட்டு மேலாண்மை இயக்குனரின் அனுமதியை எழுத்து மூலம் முதலில் பெற வேண்டும்.

---

**கே: நான் பணிபுரியும் பகுதியில் உணவு மற்றும் சேவைகள் அளிக்கும் ஊழியர்களைக் கூடுதலாகப் பணியில் அமர்த்த நாங்கள் எண்ணியுள்ளோம். வேலை ஒன்றுக்கு பல்கலைக்கழகத்திற்குத் திரும்பு முன் பகுதி நேரப் பணிக்கு முயன்று கொண்டிருக்கும் என் மகளின் பெயரை நான் பிரேரிபிக்க இயலுமா?**

ப: உங்கள் மகள் காலி இடத்திற்கு தகுதி மற்றும் அதற்கேற்ற பண்புகளும் அனுபவமும் உள்ளவளாக நீங்கள் எண்ணினால், அவளை வேலைக்கு அமர்த்துவது பற்றி எண்ண உங்கள் நேர் மேலாளரிடம் இது குறித்து நீங்கள் பேசவும், பரிந்துரைக்கவும் உங்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். நீங்கள் அவளுக்கு உறவு என்பதும், தேர்வு வழி முறைகளில் உங்களுக்கு சம்பந்தம் ஏதும் இருக்கக்கூடாது என்பதுடன், காலியான பணி இடம் உங்கள் நேர் மேற்பார்வையில் இல்லாமல் நீங்கள் அதனுடன் நெருக்கமாகப் பணி செய்யக்கூடாது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியவேண்டும்.

*உங்கள் நேர் மேலாளர், வட்டார சட்டக் குழு அல்லது மனித வளக்குழுவிடமிருந்து நீங்கள் ஆர்வ முரண்பாடுகள் பற்றி மேலும் அறிவுரையும் ஆதரவும் பெற முடியும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# சுய நேர்மை

## ஆதாய முரண்பாடுகள் (தொடர்ச்சி)

## முதலீடுகள்

போட்டியாளர்கள், வினியோகஸ்தர்கள் அல்லது வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் முதலீடு செய்தால் ஆதாய முரண்பாடுகள் ஏற்படலாம். போட்டியாளர், வினியோகஸ்தர் அல்லது வாடிக்கையாளர் மீதான எந்த ஒரு "கணிசமான ஆர்வத்திற்கும்" உங்கள் நாட்டின் மேலாண்மை இயக்குனரின் எழுத்து மூலமான முன் ஒப்புதல் தேவை.

தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பைப் பொறுத்த வரை, "கணிசமான ஆர்வம்" என்பது உங்கள் தீர்ப்பை உண்மையில் அல்லது உணரப்பட்ட வகையில் பாதிக்கும் ஏதாவதொரு நிதி நாட்டத்தைக் குறிக்கும். அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றச்சந்தைகள் (CAC 40, NYSE or the London Stock Exchange போன்றவை) குறிக்கும் பொது நிறுவனப் பங்குகளில் நீங்கள் செய்யும் முதலீடுகள், நிறுவனத்தின் மொத்தப்பங்குகளில் உங்கள் பங்கு 1 சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தால் ஏற்கத் தகுந்தவை.

பல நடைமுறையிலுள்ள அல்லது சாத்தியமுள்ள ஆர்வ முரண்பாடுகளை, Compass மற்றும் தனி நபர் இருவருக்கும் ஏற்கத்தகுந்த முறையில் தீர்க்க இயலும். முக்கியமான விஷயம் என்னவென்றால் சாத்தியமான முரண்பாட்டை சிறப்புக் கூறாக்குதல் மூலம் தகுந்த நடவடிக்கைக்கு ஒப்புக்கொள்ள இயலும்.

உங்களுக்கோ (அல்லது சக பணியாளருக்கோ) ஆர்வ முரண்பாடு இருக்கக்கூடும் என்று நீங்கள் எண்ணினால், அதை உங்கள் நேர் மேலாளரிடம் நீங்கள் கட்டாயம் தெரிவிக்க வேண்டும். ஆதாய முரண்பாட்டை வெளியிடத் தவறுவது ஒழுங்கு நடவடிக்கைக்கு வழி வகுக்கும்.

## உள் வர்த்தகம்

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பல நாடுகளில், அந்தரங்கமான "உள் தகவல்களை"ப் பயன்படுத்தி பங்கு வர்த்தகத்தில் ஈடுபடல் ஒரு கிரிமினல் குற்றமாகும். ஒரு நிறுவனத்தைப்பற்றிய, அதன் இயக்குனர்கள் மற்றும் ஊழியர்கள் மட்டுமே அறிந்த, பொது மக்களுக்கு அறிவிக்கப்படாத மிக முக்கியத்தகவல் தான் உள் தகவல். பொதுப்பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்ட மற்றொரு நிறுவனத்தை பற்றிய தகவலாகக் கூட அது இருக்கலாம். உள் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதோ அல்லது அவற்றைப் பயன்படுத்தி பங்குகளை வாங்குவதோ விற்பதோ அனுமதிக்கப்படவில்லை.

Compass பங்குகளை (அல்லது பங்குச்சந்தையில் குறிப்பிடப்படும் வேறெந்த நிறுவனத்தின் பங்குகளை) உங்களிடம் அவற்றின் உள் தகவல்கள் இருக்கும் பட்சத்தில், நீங்கள் வாங்குவதோ விற்பதோ கூடாது. உங்களிடம் இருக்கும் தகவல்களை வைத்து, உங்கள் சார்பாகப் பிறரை நீங்கள் பங்கு வர்த்தகத்தில் ஈடுபடும்படி கேட்கக்கூடாது அல்லது அவற்றை மற்றவர்களிடம் அந்தரங்கமாகப் பகிர்ந்து கொள்ளுதல் கூடாது.

எந்த ஒரு உள் தகவலும், எந்த ஒரு தொழிலாலும், குரூப் தலைமை நிர்வாகி, குழும முதலீட்டாளர் உறவுகள் அதிகாரி, குழும ஊடக உறவுகள் அதிகாரி அல்லது பொது ஆலோசனை மற்றும் நிறுவனச் செயலரின் எழுத்து மூலமான முன் ஒப்புதலின்றி அவர்களின் பின் வரும் செயல்களுக்கு முன் வெளியிடப்படக் கூடாது:

- உள் தகவல், சட்டப்பூர்வமான தேவைப்படி வெளியிடப் படுவதை உறுதி செய்தல்;
- உள் தகவலை லண்டன் பங்கு மாற்றச் சந்தை வழியாக (அல்லது அது போன்ற அனுமதிக்கப்பட்ட வழிகளில்) வெளியிடல்; மற்றும்
- Compass Group PLC -இன் இணைய தளம் மூலம் அறிவித்தல்.

தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் மேற்கோள் பகுதியில் இந்த துறைகள் தொடர்பு தகவல்கள் முழுதையும் காணலாம்.

---

**கே: புதிய தொழில் பங்காளி ஒருவருடன் நாம் கூட்டு முயற்சி ஒன்றை ஒப்பந்தம் மூலம் தொடங்க முயன்று கொண்டிருக்கிறோம் மற்றும் அது வெற்றியடைந்தால் இரண்டு நிறுவனங்களின் தொழிலும் நன்றாக முன்னேறும். அந்த வேறொரு நிறுவனத்தின் சில பங்குகளை வைத்துள்ள என் சகோதரியும் அவள் கணவரும் அவற்றை விற்க உத்தேசித்திருப்பதை நான் அறிவேன். அவர்கள் நல்ல விலைக்கு விற்பதை நான் உறுதி செய்ய விரும்புவதால், நம் இரு நிறுவனங்களின் உறவு அறிவிக்கப் படும் வரையில் அவற்றை விற்கத் தேவையில்லை என்று கூற விரும்புகிறேன். இதனால் எனக்குத் தொந்திரவு ஏதேனும் வருமா?**

ப: ஆம். கூட்டுமுயற்சி உறவு பற்றிய உங்கள் தகவல் அந்தரங்கமானது என்பதால் நீங்கள் அதைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது. அது முக்கியச் செய்தியாகக் கருதப்பட வாய்ப்புள்ளதால், முதலீட்டாளர்கள் என்ற வகையில் (உங்கள் குடும்பம் போன்று) அவர்களுடைய பங்குகள் பற்றி முடிவெடுக்கையில் அத்தகவலைப் பற்றி அவர்கள் சிந்திக்கலாம். அத்தகவலை நீங்கள் அறவே வெளியிடக்கூடாது.

*எந்தத் தகவல் பொது மக்களுக்குத் தெரிந்தவுடன் நிறுவனத்தின் பங்குகளைப் பாதிக்கக்கூடுமோ, அது முக்கியத் தகவல் ஆகும். உதாரணத்திற்கு, நிர்வாக மாற்றமைப்பு, புதிய பொருள் பற்றிய தகவல், குறிப்பிடத்தக்க புதிய ஒப்பந்தங்கள், மிகப்பெரிய வழக்குகள், வருமான அறிக்கைகள் அல்லது முன்கணிப்புகள் பற்றிய தகவல்கள்.*

*உங்கள் நேர் மேலாளர், வட்டார சட்டக் குழு அல்லது மனித வளக்குழு விடமிருந்து நீங்கள் ஆர்வ முரண்பாடுகள் பற்றி மேலும் அறிவுரையும் ஆதரவும் பெற முடியும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# சுய நேர்மை

## பரிசுகளும் உபசரணையும்



தொழில் உறவு முறைகளில் நல்லெண்ணத்தை வளர்க்க உதவும் என்பதால் பரிசுகள் கொடுப்பதை/பெறுவதை, உபசரணை அளிப்பதை/ உபசரணையை ஏற்பதை நாம் பாராட்டுகிறோம் என்றாலும், அவை வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு மட்டுமே தகுந்தவை.

தொழில் முடிவைப் பாதிக்கக் கூடும் என்று அனுமானிக்கக் கூடிய சந்தர்ப்பங்களில், எந்த ஒரு ஊழியரும் பரிசு/உபசரணை கொடுக்க/பெற முன் வருவதோ, கொடுப்பதோ பெறுவதோ கூடாது அதன் மதிப்பு எதுவாக இருந்தாலும்.

பரிசுகள் அல்லது உபசரணைகள் கொடுக்க/பெற வாய்ப்பு நேரிடும் போது பின்வரும் விஷயங்களைக் கருத்தில் கொள்ளவும்:

- ஒரு பரிசோ, உபசரணையோ நீங்கள் அளிக்கும் போது உங்கள் நோக்கம் அல்லது அதை அளிக்கும் தொழில் பங்காளியின் நோக்கம் என்ன?
- அது தொழில் உறவை மேம்படுத்தவா அல்லது ஒப்பந்தப் புள்ளியின் முடிவு போன்ற தொழில் முடிவைத் தனக்குச் சாதகமாக்க நினைக்கும் நோக்கமா?
- பரிசு அல்லது உபசரணையின் தன்மை ஆர்பாட்டமற்றதா அல்லது உங்களை (அதைப் பெற்றவர் என்ற முறையில்) அதற்குப் பதில் உபகாரம் செய்ய வேண்டும் என்று உணரச் செய்ததா?
- பரிசோ/உபசரணையோ அது பெறப்படும் மற்றும் அளிக்கப்படும் நாட்டில் சட்டபூர்வமானதா என்று முன்பே சோதிக்கப்பட்டதா? சில நாடுகளில் அனுமதிக்கப்படாததால், அரசாங்க அதிகாரிகளுக்கு பரிசுகள் அளிக்கவோ அல்லது உபசரணைகள் செய்யவோ எண்ணும் முன் ஜாக்கிரதையாக இருக்கவும்.
- பெறுபவரின் பரிசுகள் கொள்கை பரிசையோ உபசரணையையோ பெற அவரை அனுமதிப்பது பற்றி நீங்கள் சோதித்தீர்களா?
- பரிசையோ, உபசரணையையோ கொடுப்பதை அல்லது பெறுவதை உங்களால் நியாயப்படுத்த முடியுமென்பதில் உங்களுக்கு சந்தோஷமா? அது சரியெனப்படாவிட்டால், அனேகமாக சரியல்ல தான்.

## எந்த விதமான பரிசு அல்லது உபசரணை நான் அளிக்கவேண்டும் என்பது அவசியமா?

சில வகை பரிசுகளும் உபசரணைகளும் ஏற்கக்கூடியவை என்று ஒரு போதும் எண்ணக்கூடாது. பின் குறிப்பிட்டவற்றில் எதையும் கொடுக்க முனைவதோ, கொடுப்பதோ, பெறுவதோ அல்லது ஒப்புவதோ கூடாது:

- நீங்கள் ஈடுபட்டுள்ள - அல்லது ஈடுபட எண்ணும் - ஏதாவது போட்டி மிகு ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி செயல்முறையில் ஈடுபட்டுள்ள மூன்றாம் தரப்பாளருடன் சம்பந்தப்பட்ட பரிசுகள் அல்லது உபசரணைகள்;
- உள்ளூர் சட்டம் லஞ்சமாகக் கருதும் அரசு அதிகாரிக்கு கொடுக்க முனையும் பரிசு போன்ற உள்ளூர் சட்டங்களுக்குப் புறம்பான பரிசுகள் அல்லது உபசரணைகள் - தயவு செய்து நீங்கள் உங்கள் வட்டார சட்டக்கடப்பாடுகளுடன் நன்கு பரிச்சயம் உள்ளவரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்;
- பணம் கொடுப்பது (அல்லது அதற்குச் சமமானவைகள்) அல்லது ஒருவருடைய தனிப்பட்ட பற்றுச்சீட்டுகளை பைசல் செய்வது அல்லது செலவுகளை ஏற்பது;
- இந்த தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பை மீறும், அநாகரீகமானதெனக் கருதப்படும், தொழில் உறவுமுறைக்குத் தகாத அல்லது Compass -இன் நற்பெயருக்கு களங்கம் உண்டாக்கக்கூடிய எந்த ஒரு உபசரணையும்; மற்றும்
- அது உங்கள் தனிப்பட்டதாக அல்லது நிறுவனம் சார்பாக இருந்தாலும், நீங்கள் தெரிவிக்க அல்லது அனுமதி பெற விரும்பாத பரிசுகள் அல்லது உபசரணை.

---

**கே: ஆதரவுச் சேவைகளை வெளியில் ஒப்படைப்பது பற்றிப் பல மாதங்களாக ஒரு உள்ளூர் அரசு அமைப்புடன் நான் விவாதித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு உள்ளூர் அரசு அதிகாரியின் மகள் திருமணத்திற்கு நன் அழைக்கப்பட்டிருக்கிறேன். என் கலாசாரப்படி திருமணத்தில் விருந்தாளிகள் ரொக்கப்பரிசுகள் தரவேண்டும். இது ஏற்கத் தகுந்ததா?**

ப: கலாசார வேற்றுமைகள் சில சமயங்களில் தர்ம சங்கடமான நிலைமைகளுக்கு நம்மை ஆளாக்கலாம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறோம் மற்றும் இதற்கு உணர்வுப்பூர்வமாக நாங்கள் சம்மதிக்க எண்ணினாலும், சந்தர்ப்பங்கள் எதுவாக இருந்தாலும், ரொக்கப்பரிசு தருவது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இங்கு ரொக்கமற்ற பரிசை அளிப்பது உசிதமாக இருக்கும் என்றாலும், முதலில் நீங்கள் உங்கள் நேரடி மேலாளரிடம் இதைப்பற்றிப் பேச வேண்டும் மற்றும் அவருடைய முன் அனுமதியை பரிசு கொடுக்கு முன் பெற வேண்டும்.

# சுய நேர்மை

## பரிசுகளும் உபசரணைகளும் (தொடர்ச்சி)

கட்டாயம் நீங்கள்எப்போதும் எந்த ஒரு பரிசு அல்லது உபசரணை அளிக்கும் அல்லது பெறும் முன் உங்கள் நேர் மேலாளரின் முன்கூட்டிய அனுமதி கோர வேண்டும்.

<u>முதல் பத்து நாடுகளுக்காக</u>

நீங்கள் கட்டாயம் எப்போதும் ஒவ்வொரு பெறுநருக்கும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1ல் தொடங்கும் 12 மாத காலத்தில் பின் வரும் எல்லைகளை கடக்கக்கூடிய ஏதாவதொரு பரிசு அல்லது வரவு செலவு கணக்கில் * இல்லாத உபசரணை, **அளிக்கும் அல்லது பெறும் முன்**, உங்கள் மேலாண்மை இயக்குனரின் (அல்லது அவரால் நியமிக்கப்பட்ட தகுந்த அதிகாரியின்) அனுமதி கோர வேண்டும்:

(அ) £3,000 அல்லது (ஆ) உங்கள் நாட்டு மேலாண்மை இயக்குனர் நிர்ணயித்த உள்ளூர் நிலைக்கேற்ற குறைந்த எல்லை இவற்றில் எல்லையைத்தாண்டும் உபசரணை (சாப்பாடு உட்பட);
£100 க்கு அதிமான மதிப்புள்ள பரிசு (அல்லது ஏதாவதொரு ஊள்ளூர் குறைந்த எல்லை); அல்லது
உபசரணை அளிக்கும் விதமான அளித்த அல்லது அளிக்க முன் வந்த பயணம் அல்லது இராத்தங்கல்.

இது தவிற, அ) £5,000 க்கு மேற்பட்ட (5 நபர்கள் வரை); ஆ) £7,500 க்கு மேற்பட்ட (6 முதல் 10 நபர்கள் வரை) எந்த ஓர் உபசரணை அல்லது இ)£500 க்கு மேற்பட்ட பரிசுக்கு குரூப் மேலாண்மை இயக்குனரின் முன் அனுமதி கோரப்பட வேண்டும். £2,000 க்கு மேற்பட்ட பரிசு மற்றும் £75,000 க்கு மேற்பட்ட உபசரணைக்கு AICயின் அனுமதி எப்போதும் கோரப்பட வேண்டும்.

<u>முதல் 10 அல்லாத மற்ற எல்லா நாடுகளுக்காக</u>

நீங்கள் கட்டாயம் எப்போதும் ஒவ்வொரு பெறுநருக்கும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1ல் தொடங்கும் 12 மாத காலத்தில் பின் வரும் எல்லைகளை கடக்கக்கூடிய ஏதாவதொரு பரிசு அல்லது வரவு செலவு கணக்கில் * இல்லாத உபசரணை, **அளிக்கும் அல்லது பெறும் முன்**, உங்கள் மேலாண்மை இயக்குனரின் (அல்லது அவரால் நியமிக்கப்பட்ட தகுந்த அதிகாரியின்) அனுமதி கோர வேண்டும்:

(அ) £1,500 அல்லது (ஆ) உங்கள் நாட்டு மேலாண்மை இயக்குனர் நிர்ணயித்த உள்ளூர் நிலைக்கேற்ற குறைந்த எல்லை இவற்றில் எல்லையைத்தாண்டும் உபசரணை (சாப்பாடு உட்பட);
£100 க்கு அதிகமான மதிப்புள்ள பரிசு (அல்லது ஏதாவதொரு உள்ளூர் குறைந்த எல்லை); அல்லது
உபசரணை அளிக்கும் விதமான அளித்த அல்லது அளிக்க முன் வந்த பயணம் அல்லது இவு தங்குதல்.

இது தவி, அ) £2,500 க்கு மேற்பட்ட (5 நபர்கள் வரை); ஆ) £5,000 க்கு மேற்பட்ட (6 முதல் 10 நபர்கள் வரை) எந்த ஓர் உபசரணை அல்லது இ)£250 க்கு மேற்பட்ட பரிசுக்கு குழும மேலாண்மை இயக்குனரின் முன் அனுமதி கோரப்பட வேண்டும். £1,000 க்கு மேற்பட்ட பரிசு மற்றும் £75,000 க்கு மேற்பட்ட உபசரணைக்கு AICயின் அனுமதி எப்போதும் கோரப்பட வேண்டும்.

---

*முதல் பத்து நாடுகள்: அமெரிக்கா, கனடா, பிரேசில்,ஜெர்மனி,ஸ்பெய்ன்,ஃப்ரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான்.*

** குறிப்பிட்ட நிதி ஆண்டின் வரவு செலவு கணக்கை நிர்ணயிக்கும் ஒரு பகுதியாக சம்பந்தப்பட்ட நாட்டின் GMD ஆல் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நிதி ஆண்டில் அவ்வப்போது பரிசீலனைகளுக்கு உள்ளாகக்கூடிய, விலை-மைய வரவு செலவு கணக்கில் ஏற்கனவே உள்ளிடப்பட்ட உபசரணை (குழுமத்தில் தொழில் நடத்தும் இடத்தில் அளிக்கப்பட்டாலோ அல்லது மூன்றாவது பேர்வழிகளிடம் பெறப்பட்டாலோ), மேற்குறிப்பிட்ட நிதி எல்லைகளுக்கு உட்பட்டதல்ல மற்றும் உரியமட்டத்தில் கூர்ந்த ஆய்வுக்குப்பின் அனுமதிக்கப்பட்டதாகக் கருதப்படும். உபசரணை எந்த நேரத்தில் அளிக்கப்பட்டது முதலிய இந்தக்கொள்கையின் நிபந்தனைகள் (உ.ம். ஒப்பந்தப்புள்ளி ஆய்வின் போது) பொருந்தும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# சுய நேர்மை

## பரிசுகளும் உபசரணைகளும் (தொடர்ச்சி)

அவ்வப்போது மாற்றங்களுக்கு உட்படக்கூடிய குரூப் அளவுகோல்களாகிய இத்தகைய பண்புகள் குரூப் ஒப்புதல்கள் கையேட்டில் அமைக்கப்பட்டுள்ளதைத் தயவு செய்து குறித்துக் கொள்ளவும். நீங்கள் பணிபுரியும் நாட்டின், அவசியம் பின்பற்ற வேண்டிய, உள்ளூர் பரிசுகள் மற்றும் உபசரணை கொள்கை அதிகக் கடுமையான எல்லைகளை நிர்ணயித்திருக்கலாம். உங்கள் உள் நாட்டில் பொருந்தும் எல்லைகளையும், குழும ஒப்புதல்கள் கையேட்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லைகளையும் பரிச்சயப்படுத்திக்கொள்வது உங்கள் பொறுப்பு.

## பரிசுகளை ஒப்புக்கொள்ளுதல்

ஏற்றுக்கொள்ளப்பட்டால், தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பை மீறுவதற்கு ஒப்பான பரிசை அளிக்கப்படும் போது ஒப்புக்கொள்ள மறுப்பது, சில நாடுகளிலும் கலாசாரங்களிலும் அவமதிப்பாகக் கருதப்படுவதை நாங்கள் அறிவோம். இத்தகைய சந்தர்பங்களில், நீங்கள் பரிசை ஒப்புக் கொள்ளலாம் என்றாலும், அதை நீங்கள் வைத்துக் கொள்ளலாமா, திரும்ப அதை அளித்தவரிடமே தர வேண்டுமா அல்லது அதை விற்று வந்த தொகையை தர்மத்திற்கு அளிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்க நீங்கள் உடனே உங்கள் நேர் மேலாளரிடம் அதைத் தெரிவிக்க வேண்டும்.

எந்த சந்தர்பங்களிலும் நீங்கள் பரிசுகளை ரொக்கமாக (அல்லது பணத்திற்குச்சமமான வங்கிக்காசோலை, பணவிடை, முதலீட்டுப்பத்திரங்கள், தனிப்பட்ட பற்றுச்சீட்டுக்களுக்குப் பணம் கொடுத்தல், அல்லது செலவுகளை ஈடுகட்டல்) ஒப்புக்கொள்ளக்கூடாது.

## அரசு, கூட்டுத்தொழில் முயற்சி, பொது மற்றும் அரசுத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளின் வருகைகள்

நம் தொழிற்தன்மையால், உலகம் முழுவதும் நாம் செயல்படும் அலுவலகங்கள் அல்லது இடங்களுக்கு அரசு, கூட்டுத் தொழில் முயற்சி மற்றும் அரசுத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் வரக்கூடும். Compass அளிக்கும் சேவைகளின் அனுகூலங்களை மேம்படுத்துவது மற்றும் செயல்முறையில் விளக்குவது ஏற்கத்தகுந்தது என்றாலும் அதே சமயம் தனிப்பட்ட சலுகைகளை அளித்து முடிவுகளைச் சாதகமாக்க முயற்சிக்கக் கூடாது.

---

***பரிசு மற்றும் உபசரணை பதிவேடுகளும் ஒப்புதல்களும்***

*எல்லாப் பரிசுகள், உபசரணை மற்றும் தொழில் விருந்துகள் Compass ஊழியர்களுக்கு அல்லது அவர்களால் அளிக்கப் படும்போது (ஒப்புக்கொள்ளப்பட்டாலும், மறுக்கப்பட்டாலும்) உங்கள் நேர் மேலாளரால் கட்டாயம் அனுமதிக்கப்பட வேண்டும். நீங்கள் அளிக்கும் பரிசுகள் அல்லது உபசரணைக்குப் பயனுள்ள வகையில் பதிவேடாக அமையும் உங்கள் அனைத்துச்செலவுக் கோரல்களுக்கும் ஒரு நகல் வைத்திருப்பது அவசியம். இது தவிர, உங்களுக்காக பரிசுகள் அல்லது உபசரணை அளிக்கப்பட்டால், அதை நீங்கள் ஒப்புக்கொண்டாலும், இல்லாவிட்டாலும், தகவல் பதிவிற்காக, நீங்களாகவே உங்கள் நேர் மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும். அனைத்து நேரடி மேலாளர்களும், தங்களுக்கு அளிக்கப்பட்ட பரிசுகள், உபசரணையை அல்லது தங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட மற்றவர்களது விபரங்களைப் பதிவு செய்தல் வேண்டும். மாதிரிப் பதிவுப்புத்தகம் குரூப் சட்டத்துறையிடமிருந்து கிடைக்கும்.*

*உங்கள் பணியிடத்திற்கு வருகை தரும் எந்த ஒரு அரசு, மாநில அதிகாரிகளின் பயண, தங்கும் அல்லது மற்ற செலவுகளை ஏற்கும் முன் உங்கள் நேரடி மேலாளரின் முன் கூட்டிய அனுமதியைக் கட்டயம் கோர வேண்டும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வர்த்தக நேர்மை



## போட்டி மற்றும் நம்பிக்கை-விரோதம்

போட்டி சட்டத்திற்கு - சில சமயங்களில் நம்பிக்கை-விரோத சட்டம் எனக்குறிப்பிடப்படும் சட்டத்திற்கு - இணங்க நடப்பதை மிகத் தீவிரமாக விரும்புகிறது. போட்டி சட்டத்தின் மீறல்களைப் பொறுக்க முடியாது.

நாட்டுக்கு நாடு போட்டியின் மீதான சட்டங்கள் வித்தியாசப்படலாம் மற்றும் சில சட்டங்கள் அவை உருவாக்கப்பட்ட நாட்டிற்கு வெளியே நடத்தப்படும் சட்டங்களுக்கும் பொருந்த முடியும். போட்டி சட்டங்கள் மீறப்படுவதால் உண்டாகும் விளைவுகள் நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் கடுமையானதாக இருக்கலாம். ஐக்கிய ஐரோப்பாவில், போட்டிக்கு எதிரான நடத்தைக்கு நிறுவனம் ஒன்று தனது குரூப்பின் ஆண்டு விற்பனையளவில் 10 சதவிகிதம் வரை அபராதம் செலுத்த நேரிடலாம். அமெரிக்கா, பிரேசில் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் தனி நபர்கள் சில போட்டி விரோத செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிந்தால் சிறைத்தண்டனைகள் பெற வாய்ப்பு உண்டு.

ஒரு நிறுவனம் போட்டி விரோத ரீதியில் செயல்பட்டதா இல்லையா என்று பரிசீலிக்கும் அதிகாரிகள், அடிக்கடி கருத்தில் கொள்ளும் காரணிகள் பலவற்றில் ஒன்று சந்தையில் நிறுவனத்தின் பங்குகள் அளவு. பல சட்ட வரம்புகளில் போட்டி விரோத நடவடிக்கைகளை பயன்படுத்தி ஏகபோக உரிமை அல்லது ஆதிக்கத்தைப் பெற அல்லது நிலை நாட்ட முயலுவது சட்ட விரோதமாகும். உங்கள் வட்டார அலுவலக சட்டக்குழுவை தொடர்பு கொண்டு நீங்கள் தொழில் செய்யும் பகுதியில் சந்தைப்பங்குகள் குறிப்பிடும்படியாக உள்ளதா என்று சரி பார்க்கவும்.

சில நாடுகளில் பல்வேறு வாடிக்கையாளர்களுக்குத் தக்கவாறு பல விலைகள் நிர்ணயம் செய்வது போட்டி விரோதமாகக் கருதப்படலாம். உங்கள் தொழில் வட்டாரத்தில் பொருட்கள் அல்லது சேவைகளின் விலைகளை நிர்ணயம் செய்வதில் நீங்கள் ஈடுபட்டிருந்தால், உங்களை அந்த வட்டாரதிற்கு பொருந்தும் சட்டங்களுடன் பரிச்சயப்படுத்திக் கொள்வது கட்டாயம். உங்கள் வட்டார அலுவலக சட்டக்குழுவிடம் அறிவுரை பெறப் பேசவும்.

**ஒருபோதும்:**

- **போட்டியாளர்களுடன் Compass விற்கப்போகும் பொருட்கள் அல்லது சேவைகள் விலைகளைப் பற்றி ஒப்புக்கொள்ள (அல்லது அதைப்பற்றி விவாதிக்கக்கூட) வேண்டாம்;**
- வாடிக்கையாளர்களை Compass விநியோகித்த பொருட்கள் அல்லது சேவைகளை இந்த விலைக்குத்தான் திரும்ப விற்க வேண்டும் என்று அதிகாரம் செய்ய வேண்டாம்;
- விநியோகஸ்தர்கள் பரிந்துரைக்கும் சில்லறை விலைகளை தானாகவே சுவீகரிக்க வேண்டாம் - உங்களுடைய சுய விலைகளை நிர்ணயித்து அவற்றைப் பதிவு செய்யவும்;
- சந்தையைச் செயற்கையாக உருவாக்க ஒப்புக்கொள்ளுதல், அதாவது வாடிக்கையாளர்கள்/ஒப்பந்தங்கள் Compass அல்லாத நிறுவனத்துடன் எவ்வாறு பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளல் அல்லது ஒருவருக்கொருவர் பல பிரத்தியேக பகுதிகளை ஒதுக்கிக்கொள்ளல்;
- ஏலங்கள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றுவதோ அல்லது போட்டியாளர்களுடன் ஏலங்கள் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் சம்பந்தமாக தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடுதலோ கூடாது (விதிவிலக்காக, உதாரணத்திற்கு, உங்கள் வட்டார அலுவலக சட்டக் குழு செயலாக்கும் அலுவலக ஒப்புதலுடன் கூடிய கூட்டு ஏலம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சி); மற்றும்
- பொருட்கள் உற்பத்தி அல்லது சேவைகள் அளித்தலை செயற்கையாகக் கட்டுப்படுத்த எந்த ஒரு நிறுவனத்துடனும் ஒப்புக் கொள்ளக்கூடாது.

**முதலில் உங்கள் வட்டார சட்டக்குழுவுடன் கலந்தாலோசிக்காமல் பின் வருபவனவற்றில் செயல் பட வேண்டாம்:**

- போட்டியாளரை சந்தையிலிருந்து துரத்த மொத்த செலவுகளை விடக்குறைவானக் கட்டணங்களை வசூலிப்பது;
- ஏற்கனவே உள்ள வாடிக்கையாளருக்கு வினியோகத்தை மறுப்பது (வாடிக்கையாளர் செலவுகட்டணங்களைக் கட்டுவதற்கு மறுக்கும் சூழ்நிலையைத் தவிர);
- 5 ஆண்டுகளுக்கும் மேலாகச் செல்லுபடியாகும் பிரத்தியேக ஒப்பந்தங்களுக்கு ஒப்புக்கொள்ளல்; மற்றும்
- அளிக்கப்பட்ட ஒரு தளத்தில் Compass -ற்கு எதிர்கால உணவு சேவை மற்றும் அதைச்சார்ந்த சேவைகளுக்கான வாய்ப்புகளுக்கு “முதல் மறுப்பை” அளிக்கும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.

நீங்கள் செயல்படும் நாட்டில் உங்கள் வட்டாரத்தில் சட்டக்குழு இல்லாவிடில், குழுமச் சட்டத்துறையை நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம் என்பதைத்தயவு செய்து குறித்துக்கொள்ளவும்.

---

கே: சமீபத்திய உணவுப்பொருட்கள் விலை ஏற்றத்தினால், முக்கியமாக கோதுமை, நம் ஒப்பந்தங்களைப் பரிசீலனை செய்யுமாறு வாடிக்கையாளரின் நிர்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். நம் வாடிக்கையாளர்களுக்கு நம்மால் இயன்ற சிறந்த விலையை அளிக்க உறுதி செய்யும் அதே நேரம் நாம் போட்டி போடத்தேவையென்பதால் நமது முக்கியப் போட்டியாளர்கள் என்ன செய்துகொண்டிருக் கிறார்கள் என்பதை அறிவது நமக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். நாம் இது குறித்து நமது போட்டியாளர்களுடன் விவாதித்து ஏதாவதொரு பொது ஒப்பந்தத்திற்கு இசைவது நிச்சயமாக நம் வாடிக்கையாளரின் சிறந்த நலன்களுக்கு உகந்தது அல்லவா?

ப: விலை நிர்ணயத் திட்டங்கள் பற்றியோ விலைகள் முடிவு செய்யும் சாத்தியம் பற்றியோ நமது போட்டியாளர்களுடன் நீங்கள் விவாதிப்பது சட்ட விரோதமானது, அது நமது வாடிக்கையாளர்களுக்கு சிறிது பயன்படலாம் என்று நீங்கள் நம்பினாலும் கூட. இவ்வாறு செய்ய எண்ணினால் நீங்கள் உங்களையும் நிறுவனத்தையும் வழக்கு தொடரப்படும் அபாயத்திற்குள்ளாக்குவது மட்டுமல்ல, கம்பாஸின் நற்பெயருக்கும் சேதம் விளைவிக்கக்கூடும்.

*போட்டியாளர்களுடன், வாடிக்கையாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் மூன்றாம் தரப்புடனான நடவடிக்கைகளை போட்டி சட்டம் ஒழுங்கு படுத்துகிறது. கண்ணுக்குப் புலப்படும்படி போட்டியைத் தடுக்க, தடை செய்ய அல்லது திரித்துக்கூற (அல்லது அதைச் செய்ய எண்ணும்) முயலும் ஒப்பந்தங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைந்த தொழில் நடவடிக்கைகளை அது தடை செய்கிறது.*

# வர்த்தக நேர்மை

## போட்டி மற்றும் நம்பிக்கை-விரோதம் (தொடர்ச்சி)



## வர்த்தகக் கூட்டமைப்புகள்

Compass ஊழியர்கள் வர்த்தகக்கூட்டமைப்பில் சேர எண்ணும்போது தங்களை எந்த ஒரு போட்டி விரோத நடத்தையிலும் ஈடுபடுத்தும் அல்லது ஈடுபடுத்தக்கூடியதாகத் தோன்றும் ஆபத்தில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ள குறிப்பாக எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். உங்கள் நாட்டு மேலாண்மை இயக்குனர், உங்கள் வேண்டுகோளை, குரூப் சட்டத்துறைக்கு அனுப்பி அவர்கள் உறுதிக்குப்பின் அளிக்கும் அனுமதியின்றி நீங்கள் ஒரு வர்த்தக சங்கத்தில் சேரக்கூடாது. ஊழியர்கள் போட்டியாளர்களின் பிரதிநிதிகளுடன் ஏற்படும் சந்திப்புகளின் விபரங்கள் அடங்கிய பதிவேடுகளைப் பத்திரமாகப் பராமரிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வர்த்தக சங்கங்கள், விலைக் குறைப்பு போன்ற வர்த்தகப் பிரச்சினை ஒன்றின் பொது அணுக்கத்திற்கு ஒப்புக்கொள்ள ஒரு கருத்தரங்கமாகப் பயன்படுத்தப்படக்கூடாது. சந்தைப்படுத்துவதற்கான விலைகளை ஒப்புக்கொள்ளுதல் போன்ற விஷயங்கள் விவாதிக்கப்படுகிற கூட்டங்களில் மந்தமாக பங்குகொள்ளுதல் கூட, உங்களையும் Compass -ஐயும் ஆபத்தில் மாட்டக்கூடும். அப்படிப்பட்ட கூட்டங்களில் நீங்கள் விவாதங்களை அசௌகரியமாக உணர்வதைத் தெளிவாக்கி உடனே வெளியேற வேண்டும். உடனடியாக அதன் பின் இந்த விஷயத்தை உங்கள் வட்டார சட்டக்குழுவிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

வர்த்தக சங்கக் கூட்டங்களில் நீங்கள் பங்கேற்பது பற்றி உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் உங்கள் வட்டார சட்டக்குழுவைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

## பணச் சலவை

நாம் அனைவரும் பணச்சலவையைத் தடுக்கும் சட்டங்களுக்கு இணங்குவது எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தத்தின் கீழ் அளிக்கப்படும் பொருட்கள் சேவைகளுக்கான தொகையை வாடிக்கையாளர்களிடமிருந்து (இறுதி வாடிக்கையாளர்கள் தவிர) ரொக்கமாகவோ, பயணிகள் காசோலைகளாகவோ, மூன்றாம் தரப்பு பட்டுவாடாவாகவோ அல்லது பணவிடைகளாகவோ ஏற்காமலிருப்பது Compass -இன் கொள்கை. வாடிக்கையாளர்களிடமிருந்து எங்களுக்குச் சேர வேண்டிய தொகையை பொதுவாக நாங்கள் விலைப்பட்டியலிலுள்ள வாடிக்கையாளர் பெயரிலுள்ள வங்கிக் கணக்கிலிருந்து பெற எதிர்பார்க்கிறோம்.

ஒரு வினியோகஸ்தர் அல்லது மற்றெந்த மூன்றாம் தரப்புக்கும் Compass அளிக்க வேண்டிய தொகையும் ஒப்பந்தத்திலுள்ள மூன்றாம் தரப்பின் பெயரிலுள்ள வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். இதன் விதி விலக்குகள் எழுத்து மூலமாக முன் கூட்டியே உங்கள் வட்டார சட்டக்குழு அல்லது நிதி இயக்குனரால் அனுமதிக்கப் படவேண்டும்.

Compass தனது தொழிலை, பண சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெரிவிக்கும் தேவைகள் உள்ளிட்ட, வட்டார சட்டத்தேவைகளுக்கேற்ப நடத்துவதை உறுதிப்படுத்துவது வட்டார நிர்வாகத்தின் பொறுப்பு.

---

**கே: நம் சிறு வாடிக்கையாளர்களில் ஒருவர் சமீபத்தில் நம்முடைய பொருள் விலைப்பட்டியலை பல்வேறு விதமான கணக்குகளிலிருந்து பைசல் செய்ய முடியுமா என்று கேட்பதற்கு என்னைத் தொடர்பு கொண்டார். இது சரியா?**

ப: இது ஏற்கத் தகுந்ததா என்று நீங்கள் சோதிப்பது சரிதான். கறுப்புப் பணத்தைச் சலவை செய்வதைக்குறிக்கும் இவ்வகை வேண்டுகோள் குறித்து நாம் மிகவும் ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டும். வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு உண்மையான காரணம் இருக்கக்கூடுமாதலால், அவருக்கு பதில் அளிக்கும் முன், தயவுசெய்து இந்த விஷயத்தை உங்கள் நேர் மேலாளருக்கு அல்லது வட்டார சட்டக் குழுவிற்குத் தெரியப்படுத்தவும்.

*குற்றவாளிகள் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் சேர்த்த கறுப்புப் பணத்தின் உண்மையான மூலத்தையும் உரிமையாளரையும் மறைக்க முயன்று பொய்த்தோற்றம் ஒன்றை உருவாக்கும் முயற்சி தான் பணச்சலவை மற்றும் அது தீவிரவாதத்திற்கு உதவும் பணத்தையும் குறிக்கலாம். சட்ட ரீதியான வழியில் சம்பாதிக்கப்பட்டது என தோற்றம் தரவும் அதற்காக "சுத்தம்" செய்யப்படுவதற்கும் தொடர்ந்த பரிவர்த்தனைகள் மூலம் பணம் வடிகட்டப்படலாம்.*

*நீங்கள் உங்கள் வட்டார சட்டக் குழுவிடமிருந்து, போட்டி, நம்பிக்கை விரோதம் மற்றும் பணச்சலவை பற்றி அதிக அறிவுரைகளும் ஆதரவும் பெறலாம் அல்லது குழுமச் சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளலாம். தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் இந்த துறைகள் தொடர்பு தகவல்கள் முழுதையும் காணலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* **SpeakUp** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வர்த்தக நேர்மை

## லஞ்சமும் ஊழலும்

ஒரு வர்த்தக நன்மையை அடையும் பொருட்டு ஒரு பரிசையோ, பணத்தையோ அல்லது வேறு ஆதாயத்தைப் பெறுவது அல்லது கொடுப்பது லஞ்சமாகும். லஞ்சம் உண்மையாகக் கொடுக்கப்பட வேண்டியதில்லை - அது கேட்கப்பட்டது அல்லது அதை அளிக்க முன் வந்தது மட்டுமே போதும். தனியார் தொழில் அல்லது அரசாங்கம் இவற்றில் எதை ஈடுபடுத்தினாலும் லஞ்சம் ஒரு பிரச்சினை ஆகலாம்.

லஞ்சமோ ஊழலோ எந்த ரூபத்திலானாலும் ஏற்பதற்கில்லை மற்றும் நாம் நம் தொழில் நடவடிக்கைகள் யாவற்றிலும் ஒளிவு மறைவற்ற தன்மைக்குக் கடமைப்பட்டுள்ளோம். ஊழலைத்தடுக்க அனேகமாக எல்லா நாடுகளிலும் சட்டங்கள் உள்ளன. இவற்றில் எதை மீறினாலும் அது கடுமையான குற்றமாகக் கருதப்படுவதோடு, அத்தகைய மீறலுக்கு, Compass -ற்கு அபராதங்களும் தனி நபர்களுக்கு சிறைத்தண்டனையும் கிடைக்கும்.

நேர்மை மற்றும் தொழில் நெறியின் மிக்க உயர்ந்த தரங்களை நம்மைச் சேர்ந்த அனைவரும் நிலைநாட்ட பணிச்சூழல்களை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். குறிப்பாக எந்த நாட்டிலும் உள்ள அரசாங்க,மைய, மாநில, பொது மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடனான நம் நடவடிக்கைகளுக்கு இது மிகவும் அவசியமானதாகும்.

தனியார் தொழிலிலோ அரசாங்கத்திலோ இருக்கும் எவருடனும் நீங்கள் செயல் தொடர்பு கொள்ளும்போது, கீழ்க்கண்ட அடைப்படை விதிகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்:

- எப்போதும் அங்கீகரிக்கப்படாத பணப்பட்டுவாடாவை அளிக்க முன் வரவோ அளிக்கவோ வேண்டாம்;
- எப்போதும் எவரையும் சட்ட விரோதமாக அல்லது தகாத வழியில் செயல்படும்படி தூண்ட வேண்டாம்;
- அளிப்பதற்கு முன் வரப்பட்ட அல்லது பெறப்பட்ட தகாத பணப்பட்டுவாடாக்களை சந்தேகப்பட்டாலோ அல்லது அறிய நேர்ந்தாலோ எப்போதும்தெரியப்படுத்தவும்; மற்றும்
- ஒருபோதும் ஒப்பந்தங்கள் அல்லது வியாபாரங்களை அடைய பணம் (அல்லது அதற்குச் சமமான எதையும்), பரிசுகள் அல்லது லஞ்சங்கள் அளிக்க அல்லது ஏற்க வேண்டாம்.

---

**கே: தற்சமயம் நான் உருளைக்கிழங்குகள் வினியோகஸ்தர்கள் மத்தியில் ஒப்பந்தப்புள்ளி சேகரிக்கும் பணியில் உள்ளேன். வாய்ப்பு பெறக்கூடிய வினியோகஸ்தர்களில் ஒருவர் இந்த வார இறுதியில் நடைபெற உள்ள பெரிய கால் பந்தாட்டத்திற்கான அனுமதி டிக்கெட்டுகளை அளிக்க முன் வந்துள்ளார். அவரால் போக முடியாததால் எனக்கு இரண்டு டிக்கெட்களை அளிப்பதாகவும், நண்பர் ஒருவரைக் கூட்டிப்போகலாமென்று கூறினார். இந்த டிக்கெட்களை நான் ஏற்கலாமா?**

ப: நீங்கள் டிக்கெட்களை ஏற்பதில் மிக்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். ஒப்பந்தப்புள்ளி செயல் முறையின் இடையில் நீங்கள் இருப்பதால், நீங்கள் லஞ்சம் பெறுவதாகக் கருதப்படலாம் மற்றும் இது போன்ற அழைப்புகள் ஒப்பந்தப்புள்ளி செயல் முறை நடைமுறையில் இருக்கும்போது மென்மையாக மறுக்கப்பட வேண்டும். தொழில் முடிவுகளைப் பாதிக்கக்கூடியதாகக் கருதப்படும் பரிசுகளையோ அல்லது உபசரணையோ நீங்கள் அளிக்க முன் வருவதோ பெறுவதோ கூடாது. அதிக விபரங்களுக்கு தயவு செய்து பரிசுகள் மற்றும் உபசரணை கொள்கையைக் காணவும் (இந்த கொள்கைக்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள்கள் பகுதியில் காணலாம்).

*மோசடியான, நாணயமற்ற அல்லது ஏமாற்று செயல்கள் அல்லது நடத்தைக்கு குரூப்பின் பொறுமையற்ற அணுக்கத்தை Compass குரூப்பின் மோசடிக்கொள்கை உறுதிப்படுத்துகிறது மற்றும் அனைத்து ஊழியர்களும் தேவைக்கேற்ப பார்ப்பதற்கு மெர்குரியில் கிடைக்கிறது. இதற்கான தொடர்பை மேற்கோள் பகுதியிலும் காணலாம்.*

*ஒழுங்கு நெறிக்கோட்பாடுகள் தொழிலை நன்னெறி வழியில் நடத்த குரூப்பின் ஒட்டுமொத்த அணுகலை வலுப்படுத்துகிறது. இதுவும் மெர்குரியில் அனைத்து ஊழியர்களுக்காகக் கிடைக்கிறது மற்றும் அதற்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் காணலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வர்த்தக நேர்மை

## லஞ்சமும் ஊழலும் (தொடர்ச்சி)

### வசதிசெய்வதற்கான பணப்பட்டுவாடாக்கள்

தங்கள் கடமையை உடனுக்குடன் அல்லது எப்போதும் செய்வதற்கு பொது அதிகாரிகள் (அல்லது வேறெந்த நபருக்கும்) கொடுக்கப்படும் பணத்தொகை கடமைப் பணப்பட்டுவாடாக்கள் ஆகும். உதாரணத்திற்கு, சுங்கத்துறையிலுள்ள பொருட்களை விரைவாக வெளிவிடுவதற்குக் கொடுப்பது.

Compass ஊழியர்கள் வசதிசெய்வதற்கான பணப்பட்டுவாடாக்கள் அளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பட்டுவாடாக்களை நீங்கள் செய்யக்கூடாது அவை குறைந்த தொகைகளாக இருந்தாலும் அல்லது அவை நீங்கள் செயல்படும் நாட்டில் "வழக்கமான" நடைமுறையாக இருந்தாலும்.

### புதிய பகுதிகள், புதிய துறைகள், முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள்

நமது அபாய மதிப்பீட்டு வழிமுறையின் பகுதியாக, புதிய நாட்டில் அல்லது பகுதியில் தற்சமயம் Compass நடத்தாத எந்தத்தொழிலின் தொடக்கமும், அல்லது நாம் உள்ள நாட்டில் செய்யும் தொழிலில் புதிய துறை/தொடர்யைப் புகுத்தல் முதலில் குரூப் தலைமை நிர்வாகி மற்றும் குரூப் நிதி இயக்குனரால் குரூப் ஒப்புதல் கையேட்டில் கண்ட வழிமுறைப்படி அனுமதிக்கப்படுவது அவசியம்.

இது தவிர, Compass சார்பாக பணி புரிய ஆலோசகர்களையும் முகவர்களையும் பணியில் அமர்த்தும் (குழும ஒப்புதல் கையேட்டில் இது கூட நிர்ணயிக்கப்பட்டுள்ளது) வழிமுறை மாற்றப்பட்டுள்ளது.

**எந்த எல்லைக்குப் பின் அனுமதி பெறுவது அவசியம் என்ற சமீபத்திய நிதி அளவுகளைப் பற்றி அறிய தயவு செய்து குழும ஒப்புதல் கையேட்டைக்காணவும். பிப்ரவரி 01, 2011 முதல் இவை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டுள்ளன.**

---

**கே: உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கான உரிமங்கள் அளிக்கும் அதிகாரமுள்ள அரசாங்க அதிகாரிகள் வருவது அதிகரித்துள்ளது. அவர்கள் இரவு உணவிற்கு அழைத்துச் செல்லப்படுவதை எதிர்பார்க்கிறார்கள் மற்றும் எங்களை சிகரெட்டுகளும் சில சமயங்களில் பணமும் கேட்கிறார்கள். இவற்றை மறுத்தால் அவர்கள் நம் உரிமங்களை அளிக்க மாட்டார்கள் என்பதோடு நாம் நம் தொழிலையும் நடத்த முடியாது என்பதால் நான் கவலையுற்றிருக்கிறேன். நான் என்ன செய்வது?**

ப: சரியான எல்லா உரிமங்களும் அனுமதிகளும் நாம் நம் தொழில் நிலையங்களை நடத்த அவசியம் என்றாலும், உரிமங்கள் பெறப் பரிசுகள் அல்லது பணம் கொடுப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. உடனடியாக நீங்கள் இந்த விஷயத்தை உங்கள் நேர் மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

*லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய நம் கொள்கையை நீங்கள் ஒழுங்கு நெறிக் கோட்பாடுகளுடன் பரிச்சயம் உள்ளதை உறுதி செய்து கொண்டு அதிகமாக அறியலாம் (இதற்கான தொடர்பை இந்த தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் காணலாம்) மற்றும் உங்கள் வட்டார சட்டக்குழுவிடமிருந்து மேலும் வழிக்காட்டலைப் பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வர்த்தக நேர்மை

## அறிக்கை சமர்ப்பித்தலும் கணக்கீடும்



Compass துல்லியமாகவும் குறிக்கோள் அடிப்படையில் தனது நிதி மற்றும் நிதியல்லாத தகவல்களை பதிவு செய்தல் அத்தியாவசியமானது.

## நிதி அறிக்கை அளித்தல்

அனைத்து புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் கணக்கு வழக்குகள் Compass -இன் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கு வைப்பு முறைகள் கையேட்டை அனுசரிப்பது அவசியம். சர்வதேச நிதி அறிக்கைத் தரங்களுக்கு இணங்க அமைந்த இந்தக் கையேடு அனைத்து விஷயங்களையும் ஒரே இடத்தில் அடக்கிய மூல நூல் மற்றும் Compass -இன் அனைத்து தொழில்களும் அறிக்கை அளிக்க தெளிவாக விளக்கப்பட்ட ஒரே கொள்கைகள் அமைப்பு.

பின்வரும் அடிப்படை விதிகளை மனதில் கொள்ளவும்:

- எல்லா பதிவேடுகளும் துல்லியமாகவும் முழுமையாகவும் இருத்தல் வேண்டும் மற்றும் அவை தொழிலின் துல்லிய நிலைமையை எந்த ஒரு காலப் பகுதிக்கும் காண்பிக்க வேண்டும்;
- தேவையான ஆவணங்களை பரிவர்த்தனையின் போது சேகரித்துக்கொள்ள வேண்டும்;
- கணக்குப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் வட்டார சட்ட மற்றும் நிதித்துறைகள் தேவைக்கேற்ப தக்க வைத்துக்கொள்ளப்பட வேண்டும், ஆனால் எப்படி இருந்தாலும், குறைந்த பட்சம் ஆறு ஆண்டுகளுக்காவது;
- கையகப்படுத்தல்கள் மற்றும் வேறு குறிப்பிடத்தக்க பரிவர்த்தனைகள் சம்பந்தமான வருடாந்திர நிதி அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் நிரந்தரமாகப் பாதுகாக்கப்படவேண்டும்; மற்றும்
- தணிக்கையாளர்களுக்கு துல்லியமான தகவல்கள் அளித்து அவர்கள் விரும்பும் ஆவணங்கள் மற்றும் சக ஊழியர்களை தடையில்லாமல் அணுக வைத்து (எப்போதும் சட்டக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு) எந்த அக மற்றும் புறத்தணிக்கைகளுடனும் முற்றிலும் ஒத்துழையுங்கள்.

கட்டாயமாக ஒரு போதும் நீங்கள்:

- நிதி அல்லது அது சம்பந்தப்படாத பதிவேடுகளை திருத்தக்கூடாது;
- குழும ஒப்புதல்கள் கையேட்டில் குறிப்பிடப்பட்ட சரியான ஆவணங்களோ அல்லது அங்கீகாரமோ இன்றி Compass -இன் சொத்துக்களை விற்கவோ அல்லது வேறு வகையில் மாற்றவோ கூடாது;
- எந்த ஒரு பொய்யான அல்லது தவறான கணக்குப் பதிவுகள் செய்வதோ அல்லது செலவுகளைக் கோரவோ கூடாது; அல்லது
- தவறான செயல்களை மூடி மறைக்கத் தகவல்களை அழிக்கக் கூடாது.

சரியான நிதி வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை அல்லது எந்த வகையிலோ பொய்யான அல்லது தவறான பதிவுகள் செய்யப்படுகின்றன என நீங்கள் கவலைப்பட்டால், உடனே உங்கள் நேர் மேலாளரிடம் உங்கள் கவலைகளைத் தெரிவிக்கவும். உங்கள் நேர் மேலாளரிடம் இந்த விஷயத்தை எழுப்ப அசௌகரியப்பட்டால், நீங்கள் உங்கள் வட்டார நிதி இயக்குனர், மனித வளம் அல்லது **Speak Up** உடன் பேசுவது பற்றி எண்ணலாம்.

---

**கே: உண்மையாகவே நாம் வெற்றிகரமான அரையாண்டைக் கடந்து விட்டோம் மற்றும் நம் இலக்குகளைத்தாண்டி விட்டோம். அடுத்த சில மாதங்கள் இதைப்போன்று எளிதாக இருக்குமென்று நாம் எதிர்பார்க்கவில்லை மற்றும் நம்முடைய புதிய வாடிக்கையாளர் வருமானங்களை அடுத்த காலாண்டுத்தொகையுடன் சேர்த்து நம் செயல் பாட்டைச் சமனாக்க முடியுமா என எண்ணிக் கொண்டிருக்கிறேன். இது வாடிக்கையாளர் மீது எதிர்மறையான பாதிப்பை உண்டாக்கும் என நான் கருதவில்லை மற்றும் நான் உண்மை எண்களை மாற்ற மாட்டேன். இது சரியா?**

ப: இல்லை. விற்பனைகள் அல்லது லாபங்களை அறிக்கைக்காலங்களுக்கு மத்தியில் மாற்றுவதற்கான நோக்கத்துடன் கூடிய எந்த ஒரு செயலும் நம் நிதி நிலைமையைத் தவறாகக் காட்டக்கூடும் என்பதால் ஏற்பதற்கில்லை. எல்லா அறிக்கைகளும் துல்லியமாகவும் மிகச்சரியாகவும் இருப்பதை தயவு செய்து உறுதி செய்து கொள்ளவும்.

*சரியான அறிக்கை மற்றும் கணக்குகள் பற்றி மேலும் அறிவுரையும் ஆதரவும் உங்கள் நேர் மேலாளர், வட்டார நிதிக்குழு அல்லது குரூப் நிதி அதிகாரியிடமிருந்து பெறலாம்.*

*குரூப் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கு வைப்பு முறைகள் கையேடு மற்றும் குரூப் ஒப்புதல்கள் கையேடு இந்தவிஷயத்தில் அதிக விபரங்களும் வழிகாட்டலையும் கொண்டிருக்கின்றன. இவற்றை மெர்குரி வழியாகவோ தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் குறிக்கப்பட்டுள்ள தொடர்புகள் மூலமாகவோ அணுகலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வர்த்தக நேர்மை



## தரவுத் தனியுரிமை

தொழில் நிறுவனம் என்ற முறையில், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள்,வினியோகஸ்தர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு நபர்களின் தனிப்பட்ட தரவுகளை Compass வைத்துள்ளது. இத்தகவல்கள் காகிதக்கோப்புகளிலும், மின்னணுப் பதிவுகளிலும் வைக்கப்பட்டிருக்கலாம். இத்தகைய தனிப்பட்ட தரவுகளின் தனியுரிமை எந்நேரமும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்து கொள்வது அத்தியாவசியமானது.

சில நாடுகளில், சட்டப்படி தரவு தனியுரிமைக் கட்டுப்பாடுகளுக்கு இணங்க வேண்டியிருக்கும் என்பதோடு, அவற்றுக்கு இணங்கத்தவறுவது Compass -ஐயும் அதன் ஊழியர்களையும் ரொக்க அபராதங்களுக்கும் மற்றும் குற்றவியல் தண்டனைகளுக்கும் உள்ளாக்கும்.

நம்மிடமிருக்கும் தனிப்பட்ட தரவுகளை மட்டும் தொழில் காரணங்களுக்கு நாம் பயன்படுத்த வேண்டும் மற்றும் தரவு குறித்து பின் வருபனவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்:

- சட்டப்படி பெறப்பட்டது;
- அது பெறப்பட்ட காரணங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது;
- பயன்படுத்தும் காரணத்திற்கேற்பவும் துல்லியத்துடனும் இருப்பது;
- தேவைக்கு மீறிய காலவரைக்கு அப்பால் வைத்துக் கொள்ளாமலிருப்பது;
- பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டது; மற்றும்
- மற்ற நாடுகளுக்கு தகுந்த பாதுகாப்பில்லாமல் அனுப்பப்படக்கூடாது.

மேலே உள்ள விஷயங்களைத்தவிர, நமக்கு தனிப்பட்ட தகவல் தரவுகளை அளிக்கும் நபர்கள் அவைகளை எந்தக் காரணத்திற்காக அணுகுவதற்கான உரிமையுள்ளவர் என்பதை அறிந்துள்ளதை உறுதி செய்து கொள்ள நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உண்டு.

கீழேயுள்ள அடிப்படை விதிகளுக்கு எப்போதும் கட்டுப்படுங்கள்:

- தனிப்பட்ட தரவுகள் அவற்றைக் கையாளும் உரிமை பெற்றவர்களால் மற்றும் தொழில் காரணங்களுக்கு மட்டுமே அணுகப்பட வேண்டும்;
- தனிப்பட்ட தரவுகள் ஒரு போதும் Compass -ற்கு உள்ளேயும் வெளியேயும், அவர்களும் அத்தரவுகளை அதே அளவு தனியுரிமையுடன் கையாள்வதை உறுதி செய்யும் தேவையான ஒப்புதல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் இன்றி அங்கீகரிக்கப்படாத நபர்களுக்கு அளிக்கப்படக்கூடாது; மற்றும்
- தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்புடனும் வரையறுக்கப்பட்ட அணுகலுடனும் கையாளப்படுவதை எப்போதும் உறுதி செய்து கொள்ளவும்.

தரவுகளை அணுகுவதற்கு, நீங்கள் சம்பிரதாயமான சட்ட அல்லது சீரமைப்பு வேண்டுகோள்கள் பெற்றால், அல்லது எவர்களுடைய தரவுகளை வைத்திருக்கிறோமோ அந்த நபர்களிடமிருந்து முறையீடுகள் பெற்றால், முதலில் நீங்கள் விஷயத்தை உங்கள் வட்டார சட்டக்குழுவிடம் அல்லது தரவுகளின் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கையாள வட்டாரத்தில் எவர் பொறுப்போ அவர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

---

**கே: என் வட்டாரத்தில் நாம் அளிக்கும் புதிய உணவு சார் சேவைகள் மேம்பாட்டிற்கு சந்தைப்பிரச்சாரம் செய்ய எண்ணி இருக்கிறேன். சில அஞ்சல்களை ஒன்றாகப் போடுவதற்கு நமது வாடிக்கையாளர் தரவுத்தளத்தில் உள்ள பெயர்கள் மற்றும் முகவரிகளை நான் பயன்படுத்த முடியுமா?**

ப: நீங்கள் வட்டார தனி நபர் தரவுச் சட்டங்களை மீறக்கூடுமாதலால், இந்த வகை தகவல்களைப் பெற ஒப்புக்கொண்ட நபர்களுக்கு மட்டும் நீங்கள் இத்தகைய சந்தைச் செய்திகளை அனுப்ப வேண்டும். வாடிக்கையாளர் தரவுத் தளத்தில் உள்ள தரவுகள் வேறொரு காரணத்திற்காக சேகரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கலாம் என்பதால் அது உங்களுக்குப் பயன்படும் என நீங்கள் அனுமானிக்க முடியாது. நீங்கள் உங்கள் நேர் மேலாளரிடமோ அல்லது வட்டார சந்தைப்படுத்தும் துறையிடமோ மேல் வழி காட்டலுக்குப் பேச வேண்டும்.

*தரவு தனியுரிமை பற்றி அதிக விபரம் மற்றும் வழிகாட்டலை உங்கள் நேர் மேலாளர் அல்லது வட்டார சட்டக் குழுவிடமிருந்து பெற முடியும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வேலை

## ஆரோக்கியமும் பாதுகாப்பும்




Compass -இல் நம்மைச்சேர்ந்தவர்கள், நம்மிடம் வேலை செய்வதற்கும் நம்முடன் தொழில் செய்வதற்கும் ஏற்ற நல்லதொரு நிறுவனமாக மட்டுமல்ல, உயர்ந்த அளவு கோல்களுக்கும் தரத்திற்கும் நன்மதிப்பு பெற்ற ஒர் மிகச்சிறந்த நிறுவனமாகவும் ஆக்கி விடுவார்கள்.

நம் ஊழியர்கள் நமது மதிப்பு மிகுந்த சொத்து ஆவார்கள். வியாபாரத்தில் வெற்றி பெறுவதற்கான முக்கியக் காரணியாக இருக்கிறார்கள். மிகச்சிறந்த சேவையை ஒருவருக்கொருவர், நம் சேவை பெறுனர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கவும், நம்மைச்சேர்ந்தவர்களை பாரபட்சமின்றி பேணி வளர்க்கவும், ஊக்கப்படுத்தவும், தூண்டவும் தாங்கள் வழி நடத்திச்செல்வதை உறுதிப்படுத்துவது ஒவ்வொரு மேலாளரின் பொறுப்பு.

ஊறு இல்லாத ஆரோக்கியமான பணியிடத்தில் செயல்பட்டு, உண்ணுவதற்கு எப்போதும் பாதுகாப்பான, சுற்றுச்சூழலின் தாக்கத்தைக் குறைக்கும் உணவை அளித்து ஒருவருக்கொருவர், நம் வாடிக்கையாளர்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பத்திரமாகப் பாதுகாப்பது நம் தார்மீகக் கடமை.

நம் செயல்பாட்டு முதன்மைகளில் முதலில் நிற்பது ஆரோக்கியமும் பாதுகாப்பும். Compass -இன் அனைத்து மேலாண்மை கூட்டங்களிலும் தங்கள் நிகழ்ச்சி நிரலில் முதன்மையான ஒன்றாக ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நம் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கொள்கைகள் தொழில் மற்றும் உரிய சட்டத்தின் தேவைகளைத் தொடர்ந்து ஆண்டுக்கு ஒரு தரம் Compass Group PLC இயக்குனர் குழுவால் பரிசீலிக்கப்படுகின்றன.

Compass அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் இடரற்ற பணிச்சூழல்களை அளிக்க மற்றும் Compass முழுதும் சிறந்த வழி முறையை மேம்படுத்த கடமைப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக Compass தொழில் முழுவதும் சீராக அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கொள்கையையும், குறைந்தபட்ச செயல் அளவுகோல்களையும் நடத்தைகளையும் நாம் மேம்படுத்தி உள்ளோம். குறிப்பாக நாம்:

- ஊழியர், வாடிக்கையாளர் அல்லது ஒப்பந்தக்காரர் எவருக்கும் காயம் நேர்வதைத் தடுக்க முயற்சிப்போம்;
- எந்த ஒரு புதிய ஒப்பந்தத்தையும் ஏற்கும்போது, எவ்வளவு சீக்கிரம் இயலுமோ அவ்வளவு விரைவில் ஒரு ஆபத்து மதிப்பீட்டை நடத்த வேண்டும்;
- நம் கொள்முதல் முடிவுகளின் பாதுகாப்பு விளைவுகளை எண்ண வேண்டும்; மற்றும்
- ஒவ்வொரு ஊழியரும் சரியாகப் பயிற்சி பெற்று தன் பணியைப் பாதுகாப்பாக செய்வதை உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும்.

நம் வினியோகஸ்தர்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரர்களிடம் இருந்தும் இது போன்ற உயர்ந்த அளவுகோல்களை நாம் எதிர்பார்க்கிறோம்.

நம்மிடையே பணிபுரியும் நம் வாடிக்கையாளர்கள் மற்றும் மற்றவர்களுக்கு மிக்க பாதுகாப்பான சூழ்நிலையில் முடிந்த அளவுசெயல் படுகிறோம் என்பதனை உறுதி செய்ய நம் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு செயல்பாட்டை தொடர்ந்து மேம்படுத்த நாம் கடுமையாக உழைக்கிறோம் மற்றும் நம் செயல்திறனை தெளிவான அளவுத் தொகுப்புகளுக்கு எதிராக அளக்க ஆரம்பித்திருக்கிறோம்.

பாதுகாப்பிற்கு கட்டுப்பட, நிர்வாகம் மற்றும் ஊழியர்களிடமிருந்து சமமான அணுகல் தேவை என நாம் நம்புகிறோம்.

# வேலை

## ஆரோக்கியமும் பாதுகாப்பும் (தொடர்ச்சி)

இந்த அணுகலின் பகுதியாக பின்வருவனவற்றை எல்லா மட்டங்களிலும் நிர்வாகம் அனுசரிக்க வேண்டும் என்று Compass எதிர்பார்க்கிறது:

- ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அளவுகோல்களுக்கு இணங்குவதை உறுதி செய்தல் வேண்டும்;
- எப்போதும் பாதுகாப்பான பணிச்சூழலை அளித்து பராமரிக்க வேண்டும்;
- நிறுவனத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்தி, விவரித்து செயல்படுத்த வேண்டும்;
- நம் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அளவுகோல்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்ற, கம்பாஸின் வளங்களைத் திறமையுடன் பயன்படுத்த வேண்டும்; மற்றும்
- பாதுகாப்புடனும் திறமையான ரீதியிலும் பணி புரிய அனைத்து ஊழியர்களையும் பயிற்றுவிக்க வேண்டும்.

மேற்கூறியவற்றைத் தவிற, Compass எதிர்பார்ப்பது என்னவென்றால் அனைத்து ஊழியர்களும்:

- தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பான பணிச் சூழலை அளித்து "அக்கறைக்கான கடமை"யைக் காண்பிக்க வேண்டும்;
- பாதுகாப்பற்ற செயல்கள் அல்லது நிலைமைகளை அவர்கள் நேர் மேலாளரிடம் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும்;
- பணியிடங்களை அதிக பாதுகாப்புடையதாகவும் ஆக்கமுடையதாகவும் முனைப்புடன் எண்ணங்களை அளிக்க வேண்டும்;
- பாதுகாப்பற்ற செயல் அல்லது அபாயத்தைக்கண்டு விலகக்கூடாது. பாதுகாப்பற்ற செயலை யாராவது செய்வதைக் கண்டால், அவ்வாறு செய்வது ஏன் பாதுகாப்பற்றது என்று அவர்களுக்கு விளக்கி அவர்கள் அதை நிறுத்தும்படி கோர வேண்டும். அவர்கள் மறுத்தால், அதை பற்றி உங்கள் நேரடி மேலாளரிடம் முறையிடுவது உங்கள் பொறுப்பு;
- பணிக்கு போதைப்பொருள் அல்லது மது போதையில் இருக்கும்போது வரக்கூடாது;
- எப்போதும் சரியான தனிப்பட்ட பாதுகாப்பு சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்;
- உங்கள் பணியிடத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறிந்துள்ளதை உறுதி செய்து கொள்ளுங்கள்; மற்றும்
- பாதுகாப்பான வேலை முறைகளையே எப்போதும் பின்பற்றுங்கள்.

---

**கே: விரைவில் நிகழப்போகும் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றிற்காக தற்காலிக ஊழியர்கள் கொண்ட பெரிய குழு ஒன்றினை நான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். நேரம் போதாமையால் நாங்கள் மிகவும் அதிக அளவுக்கு வேலைப்பளுவுடன் இர்போம் என எதிர்பார்க்கிறோம். பெரும்பாலான தற்காலிக ஊழியர்கள், ஏற்கனவே எனக்காகப் பணிபுரிந்துள்ளமையால், நான் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு பற்றிய உரையையும் நெருக்கடி நிலை நடைமுறையையும் தவிர்க்க விரும்புகிறேன். இது சரியா?**

**ப:** இல்லை. Compass -ற்கு பணிபுரியும் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பான மற்றும் இடரற்ற சூழ்நிலையை உறுதி செய்வதில் நமக்கு எல்லோருக்கும் பொறுப்பு உள்ளது. நீங்கள் சில நிமிடங்களை ஒதுக்கி குழுவிற்கு சுருக்கமாக உரையாற்றுவதும் தீ விபத்து ஏற்பட்டால் அல்லது மற்ற நெருக்கடி நிலையில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை கோடிட்டுக் காட்டுவதும் அவசியம்.

*நீங்கள் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு குறித்த அதிக வழிகாட்டலையும் ஆதரவையும் உங்கள் நேர் மேலாளர், வட்டார மனிதவளக் குழு, வட்டார ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழ்நிலைக்குழு (HSE) அல்லது குரூப்பின் HSE -இடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு கவலை அல்லது பிரச்சினை குறித்தும்* ***Speak Up*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வேலை

## நியாயமாக நடத்தப்படல் மற்றும் சமமான வேலை வாய்ப்புகள்



ஒவ்வொரு ஊழியரும் தொழிலுக்கு அளிக்கும் தனித்துவம் மற்றும் மாறுபாட்டை Compass மரியாதை அளித்து மதிக்கிறது மற்றும் எங்கு நம் செயல் படுகிறோமோ அங்கு சாதகமான வெளிப்படையான பணிச்சூழ்நிலையை உருவக்க முயல்கிறோம்.

எங்கள் ஊழியர்களைப் பொருத்தமட்டில்:

- ஊழியர்களுடன் உள்ள எங்கள் உறவுகளை தனி நபர் கௌரவத்திற்கு மரியாதை மற்றும் அனைவருக்கும் சமமான நடத்தப்படும் முறை மீது அமைக்கக் கடமைப் பட்டுள்ளோம்.
- பாரபட்சமின்றி தகுதியின் அடிப்படையில் மட்டும் நாங்கள் வேலைக்கு அமர்த்தவும் பதவி உயர்வு அளிக்கவும் முயல்கிறோம்; மற்றும்
- அவர்கள் சம்பந்தமான எந்த வகையான பாரபட்சத்தையும் அல்லது பாலியல், உடல் அல்லது மனரீதியான எவ்வகைக் கொடுமைகளையும் நாங்கள் பொறுக்க மாட்டோம்.

எங்கள் குறிக்கோள்களை நாங்கள் அடைவதில் உதவ, மக்கள் மேலாண்மை மற்றும் மேம்பாட்டின் ஐந்து முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்தும், குறிக்கோள்கள், அளவுகள் மற்றும் செயல்கள் அடங்கிய ஒரு எளிய கட்டுக்கோப்பை உருவாக்கியுள்ளோம்:

- ஈர்த்தல் - நாம் பணி செய்யும் சமூகங்களின் மாறுபாட்டை பிரதிபலிக்கும் தகுந்த நபர்களை தகுந்த வழியில் வேலையில் அமர்த்துதல்;
- தக்கவைத்தல் - நம்முடன் தங்க விரும்பும் நபர்களுக்கு தகுந்த வெகுமதிகள், சலுகைகள் மற்றும் பணிக்கேற்ற சூழ்நிலை அளித்தல்;
- மேம்படுத்தல் - அவர்கள் நம்மிடம் வேலையைச் செய்யத் தகுந்த திறன்கள் உள்ளதையும் செய்தொழில்களை மேம்படுத்திக் கொள்வதையும் உறுதி செய்து கொள்ளல்;
- ஈடுபடுத்துதல் - நம் அனைத்து ஊழியர்களையும் நமது குறிக்கோள்களுடன் இணைத்தல், அவற்றை அடைய அவர்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்கள் சாதனைகளை அடைய நலம் காணுதல்; மற்றும்
- செயல்படுதல் - தனி நபர் செயல்பாட்டை நிர்வகிக்கவும், தொடர்ந்து மேம்படுத்தவும் செய்முறைகளைக் கொண்டிருத்தல்.

ஒரு ஊழியர் என்ற வகையில் கட்டாயம் நீங்கள்:

- உங்கள் சக ஊழியர்களை நியாயமாகவும், கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடத்தவேண்டும். எந்த வகையான வேற்றுமை பாராட்டலும் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது;
- நீங்கள் வேலை செய்யும் நாட்டின் அனைத்து தொழில் (தொழிலாளர்) மற்றும் வேலை வாய்ப்பு சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். பொருந்தும் வட்டார சட்டங்களுடன் நீங்கள் பரிச்சயம் உள்ளவராக இருத்தலை உறுதி செய்து கொள்ளுங்கள் - மேல் வழிகாட்டலுக்கு உங்கள் வட்டார மனித வளத்துறையுடன் பேசவும்; மற்றும்
- சமமான வாய்ப்புகள் அளிக்கக் கடமைப்பட்டுள்ள எங்கள் மீறல்களின் நிகழ்ச்சிகள் எதையும் தெரிவிக்கவும். குரல் கொடுப்பதற்கு பயப்பட வேண்டாம் - நாம் அறிய நேர்ந்த பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நம் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது.

---

**கே: நம் தொழிலில் நான் சமீபத்தில் பதவி உயர்வுக்குச் சமமான புதிய பதவி ஒன்றுக்கு மனுச் செய்திருந்தேன். மற்ற நான்கு ஊழியர்களுடன் எனக்கும் நேர்காணல் நடந்தது எனினும் எனக்கு அந்தப்பதவி கிட்டவில்லை. சர்வதேச நாடுகளுக்குப் பயணம் போக வேண்டியிருக்கும் என்பதாலும் பெண் ஊழியர்கள் இதற்கு ஒப்புக்கொள்வார்கள் அல்லது இளம் குடும்பங்களை விட்டுப் பயணம் போக விரும்புவார்கள் என்று அவர்கள் கருதாததாலும், இந்தப் பதவிக்கு அவர்கள் ஆண் ஒருவரை அமர்த்த உத்தேசித்திருப்பதாக "அதிகாரபூர்வமற்ற" முறையில் எனக்கு கூறப்பட்டது. நான் என்ன செய்ய முடியும்?**

ப: உங்கள் பால் வேறுபாட்டால் நீங்கள் வேற்றுமைப்படுத்தப்பட்டது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. காலியிடங்களுக்கு விண்ணப்பித்த அனைவரும் பதவிக்குண்டான அவர்கள் தகுதிகள் மற்றும் பொருத்தத்தின் அடிப்படையில் தீர்மனிக்கப்படவேண்டும். இந்த விஷயத்தை நீங்கள் உங்கள் நேரடி மேலாளர் அல்லது மனித வளக் குழுவிடம் எழுப்ப வேண்டும். இவ்வாறு செய்வதை அசௌகரியமாக உணர்ந்தால், நீங்கள் **Speak Up** -ஐத் தொடர்பு கொள்ளலாம்.

*நாங்கள் செயல்படும் நியாயமாக நடத்தப்படல் மற்றும் சமமான வாய்ப்பு கொள்கைகள் பற்றி நீங்கள் மேல் விபரங்கள் மற்றும் ஆதரவை உங்கள் நேர் மேலாளர், வட்டார மனித வளக்குழு அல்லது குழுமத்தின் மனித வள அதிகாரியிடமிருந்து கோரலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# வேலை

## கொடுமை/சீண்டல் இன்றி பணி செய்வது

அனைத்து ஊழியர்களும் நியாயமாகவும் மரியாதையுடனும் நடத்தப்படுவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம். பணி இடத்தில் எங்கள் ஊழியர்கள் - அல்லது வினியோகஸ்தர்கள், தொழில் பங்காளிகள் அல்லது வாடிக்கையாளர்கள் எதிரான எந்த விதமான கொடுமையையும் சீண்டலையும் நாங்கள் பொறுக்க மாட்டோம்.

எப்போதும் பின்வரும் அடிப்படை விதிகளைக் கடைப் பிடிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்:

- ஒருவரின் இனம், இனப்பின்னணி, மதம், வயது அல்லது பாலினச்சேர்க்கை குறித்து நையாண்டி செய்யாதீர்கள்;
- அவமதிப்பென கருதப்படக்கூடிய, மின்னஞ்சல்கள், கேலிச்சித்திரங்கள், புகைப்படங்கள் முதலியவை உள்ளிட்ட எந்த ஒரு பொருளையும் வினியோகிக்க, காட்சிக்கு வைக்க அல்லது நிறுவனத்தின் எந்த சொத்திலும் வைக்கக் கூடாது;
- சிறுமைப்படுத்தும் அல்லது வேற்றுமைப்படுத்தும் கருத்துக்களை அனுப்ப, தீய வதந்திகளைப் பரப்ப, மின்னஞ்சல்களைப் பயன்படுத்த, குரல் மடல் அல்லது மற்ற வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டாம்; மற்றும்
- எப்போதும் தனிப்பட்ட தகவல்களை ரகசியத்தன்மையுடன் வைக்கவும். அவற்றைத்தவறாகப் பயன்படுத்த வேண்டாம்; மற்றும் நினைவில் கொள்ளவும்:
- தகாத, பயமுறுத்தும், அவமதிக்கும் அல்லது எந்த வகையான தீய நடத்தையும் பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

அனைத்துவிதமான கொடுமை அல்லது நிந்தனைகளும் நிறுவனத்தின் கொள்கைக்கு எதிரானவை மற்றும் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது. நீங்கள் சீண்டப்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது கொடுமைப்படுத்தப்பட்டால், அல்லது வேறொருவர் இது போன்ற நிலைமையில் இருப்பதை அறிந்தால், தயவு செய்து உங்கள் நேரடி மேலாளர் அல்லது மூத்த ஊழியரிடம் பேசவும். மாறாக நீங்கள் **Speak Up** ஐ அழைக்கலாம்.

---

**கே: என் உச்சரிப்பைப் பணியில் இருக்கும் சக ஊழியர்களில் சிலர் கேலி செய்கிறார்கள். தீங்கில்லாத வேடிக்கையாக ஆரம்பித்து தற்போது கருத்துக்கள் அதிகமாக தனிப்பட்டவையாக ஆனதால் நான் மனமுடைந்துள்ளேன். யாரும் இதனால் தொந்தரவில் மாட்டிக்கொள்வதை நான் விரும்பவில்லை என்றாலும் இதற்கு ஒரு முடிவு கட்ட உண்மையில் விரும்புகிறேன். நான் என்ன செய்வது?**

ப: உங்கள் சக ஊழியர்களிடம் இது குறித்து பேசி அவர்கள் நடத்தை உங்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்பை விளக்குவதை நாங்கள் ஊக்குவிக்க விரும்புகிறோம். இப்படிச் செய்வதை அசௌகரியமாக நீங்கள் உணர்ந்தால், அல்லது இது அவர்கள் நடத்தையைத் தடுக்காவிடில், நீங்கள் உங்கள் நேரடி மேலாளர் அல்லது மனிதவள அதிகாரியிடம் பேச வேண்டும். எந்த வகையான வேற்றுமை பாராட்டலும் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது.

*கொடுமை மற்றும் சீண்டல் இன்றி பணி செய்வது குறித்து மேல் வழிகாட்டலும் ஆதரவும் உங்கள் நேரடி மேலாளர், வட்டார மனித வளக்குழு அல்லது குழுமத்தின் மனித வள அதிகாரியிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# நிறுவன சொத்துக்கள்

## பிராண்டு பாதுகாப்பு



வாடிக்கையாளர்களையும் நுகர்வோர்களையும் Compass -ற்கு கவர்வதில் நம் நற்பெயர் முக்கிய காரணியாகும் மற்றும் இதில் உள்ள மதிப்பும் நல்லெண்ணமும் சரியாகப் பாதுகாக்கப்படுவதும், நம் பிராண்டுகளைச் சரியாகப் பாதுகாக்கவும் தகுந்த வழிகளோடு நிர்வகிக்கவும் மேம்படுத்துவதும் அவசியம்.

உணவு சேவை மற்றும் உணவு சார் சேவைகள் துறையின் முன்னணி நிறுவனம் என்ற முறையில், நாம் அடிக்கடி தயார் செய்யும், Compass -ற்குச் சொந்தமான உணவு செய்முறைக் குறிப்புகள், வழிமுறைகள், தனிப்பட்ட கருத்துக்கள் மற்றும் யுக்திகள் ஆகியவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். நம் தொழில் மற்றும் சேவைகளுக்காக வணிகக் குறியீட்டைப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்க நல்லெண்ணம் நற்பெயர் மற்றும் பிராண்டு மதிப்பை வளர்க்கிறது. வாடிக்கையாளர் தரவுகள் மற்றும் ஊழியர்கள் தகவல்கள் போன்ற மற்ற ரகசியத்தன்மை கொண்ட தொழில் தகவல்களையும் நாம் பாதுகாத்து அவற்றை ரகசியமாய் வைத்திருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

கூடவே, Compass -இன் சேவைக் கட்டுக்கோப்பு, அல்லது உணவு செய்முறைக் குறிப்புகள் மற்றும் வழிமுறை வரை படங்கள் ஆகியவற்றில் உள்ள தகவல்கள் போன்ற நம் வியாபார ரகசியங்கள், நம்மை நம் போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுத்துகின்றன மற்றும் சந்தையில் போட்டியில் அனுகூலமான இடத்தை நமக்குப் பராமரிக்கின்றன.

புதிய பிராண்டு அல்லது தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், அறிவுசார் சொத்துரிமைகளைச் சார்ந்து இருக்கவும் நினைத்தால் நீங்கள் உங்கள் வட்டார சட்டக்குழுவை கலந்தாலோசிக்க வேண்டும் தயவு செய்து Compass குரூப்பின் அறிவுசார் சொத்துக் கொள்கையையும் பார்க்கவும் (இதற்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள்கள் பகுதியில் காணலாம்).

பின் வரும் அடிப்படை விதிகளை மனதில் கொள்ளவும்:

- ஒருபோதும் நமது அறிவுசார் சொத்து உரிமைகளை சேவை பெறுனர்கள், வாடிக்கையாளர்கள், அல்லது மூன்றாந்தரப்பு பேர்வழிகளுக்கு மாற்ற வட்டார சட்டக்குழுவை முதலில் கலந்தாலோசிக்காமல் ஒப்புக்கொள்ள வேண்டாம்;
- நமது எந்த ஒரு அறிவுசார் சொத்து அல்லது ரகசியத் தகவல்களை, முதலில் அங்கீகரிக்கப்பட்ட ரகசியத்தன்மை ஒப்பந்த நடைமுறையில் உள்ளதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளாமல் பகிர்ந்து கொள்ள ஒப்ப வேண்டாம். உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால் உங்கள் நேர் மேலாளர் அல்லது வட்டார சட்டக்குழுவின் அறிவுரையைப் பெற முயலவும்; மற்றும்
- Compass -இன் அறிவுசார் சொத்து அல்லது தனியுரிமைத் தகவல்களை ஒருபோதும் சுய லாபத்திற்கு அல்லது Compass -இல் உங்கள் பதவிக்கு சம்பந்தமற்ற காரணங்களுக்காகப் பயன்படுத்த வேண்டாம்.

மூன்றாம் தரப்பு பேர்வழிகளின் அறிவுசார் சொத்து மற்றும் ரகசியத்த் தகவல்களை மதிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இந்த அடிப்படை விதிகளை நீங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்:

- உங்களுக்கு குறிப்பிட்ட அனுமதி இருந்தால் மட்டும் ஆவணங்களையும் விஷயங்களையும் நகல் எடுக்கவும்;
- எந்த ஒரு மூன்றாம் தரப்புப் பேர்வழிகளின் கண்டுபிடிப்பு உரிமை, வணிகக்குறியீடு அல்லது மற்ற அறிவுசார் உரிமையை அறிந்தே மீற வேண்டாம். உங்களுக்கு சந்தேகம் இருந்தால் உங்கள் வட்டார சட்டக் குழுவிடமிருந்து அறிவுரை பெறவும்;
- மூன்றாம் தரப்புப்பேர்வழிகளின் அந்தரங்கத்தகவல்களை உள்ளூர் அக வழிகாட்டல்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட கையெழுத்திடப்பட்ட ரகசியத்தன்மை ஒப்பந்தம் மூலம் நீங்கள் அனுமதிக்கப்பட்டாலன்றி பயன்படுத்த வேண்டாம். ; மற்றும்
- Compass -இன் கணினி அல்லது மற்ற உபகரணத்தில் உரிமம் பெறாத எந்த ஒரு மென்பொருளையும் ஏற்ற வேண்டாம்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் நேரடி மேலாளரிடம் பேசவும் அல்லது வட்டார சட்டக்குழுவிடமிருந்து அறிவுரை பெறவும்.

---

**கே: Compass -இன் பெரிய போட்டியாளர்களில் ஒருவரிடமிருந்து சமீபத்தில் Compass -இல் சேர்ந்து உள்ளேன். அந்த வேலையை விடுமுன், நான் எடுத்துக் கொண்டு வந்த விலை நிர்ணயத் தகவல்கள் உள்ளிட்ட அவர்கள் கொள் முதல் தரவுகளின் நகல்கள் சில உண்மையில் என்னுடைய புதிய குழுவிற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று எண்ணுகிறேன். இந்தத்தகவலைப் பயன்படுத்துவது Compass -இன் சிறந்த நலனுக்கு உகந்தது அல்லவா?**

**ப**: இல்லை! உங்கள் முந்தைய நிறுவனத்தின் ரகசியத்தன்மைக்கான கடமைகளையும், தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் கொள்கைகளையும் அநேகமாக நீங்கள் மீறுவதோடு சட்டத்தையும் மீறக்கூடும். உங்கள் எந்த ஒரு முந்தைய நிறுவனத்தின் ரகசியத் தகவல்களையும் கொண்டு வருவதோ பயன்படுத்துவதோ கூடாது. இதன் பொருள், பழைய வேலையில் நீங்கள் பெற்ற பொதுஅறிவு அல்லது திறன்களைப் பயன்படுத்தக்கூடாது என்பதல்ல. உங்களுக்கு சந்தேகம் ஏதும் இருந்தால், உங்கள் வட்டார சட்டக் குழுவுடன் சோதித்துக்கொள்ளவும்.

*இவைகள் ஒன்று சேர்ந்து நாம் எதை நம்புகிறோமோ அதை நிர்ணயிக்கின்றன மற்றும் நமது நடத்தைகளை வழி நடத்துகின்றன. வர்த்தகமுத்திரை பாதுகாப்பு பற்றிய மேல் ஆதரவு அல்லது வழிகாட்டலை உங்கள் நேரடி மேலாளர், வட்டார சந்தைப்படுத்தும் குழு, குரூப் சந்தை மேம்பாட்டுக்குழு அல்லது குரூப் சட்டத் துறையிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* **SpeakUp** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# நிறுவன சொத்துக்கள்

## ரகசியத்தன்மை

எந்த ஊழியரும் Compass நிறுவனம் ஒன்றின் அல்லது அதன் தொழில் சம்பந்தப்பட்ட ரகசியத்தகவல்களை குழுமத்திற்கு வெளியே குறிப்பிட்ட அதிகாரம் இன்றி வெளியிடக்கூடாது.

எங்கு ரகசியத்தகவல் வேறொரு நபருக்கு வெளியிடப்பட வேண்டுமோ, அது அந்த நபருடன் செய்து கொள்ளப்பட்ட எழுத்து மூலமான ஒப்பந்தம் அல்லது வாக்குறுதி இருந்தால் மட்டுமே வெளியிடப்பட வேண்டும்.

அதிகாரமுள்ள நீதி, அரசாங்க அல்லது சீரமை/ மேற்பார்வை அமைப்பு ஆணையின் ஷரத்துக்கள்படி நீங்கள் ரகசியத்தகவல்களை வெளியிட வேண்டியிருந்தால், அவற்றை வெளியிடும் முன் முதலில் உங்கள் வட்டார சட்டத்துறைக்கு அறிவிக்க வேண்டும் மற்றும் அவர்கள் அனுமதி பெற வேண்டும்.

Compass -இன் ரகசியத்தகவல்களை ஊழியர்கள் தங்கள் சுய லாபத்திற்கு, நண்பருக்கு அல்லது உறவினருக்குப் பயன்படுத்தக்கூடாது.

உள்ளூர் தகவல் தொழில் நுட்ப கொள்கையிலும் Compass -இன் தகவல் தொழில் நுட்ப முறைகளின் பாதுகாப்பு மற்றும் உபயோகம் குறித்த அதன் வழிகாட்டல்களை பின்பற்றுவதிலும் நீங்கள் பரிச்சயமுள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். நிறுவனம் நீங்கள் அதன் தகவல் தொழில் நுட்ப முறைகளைப் பயன் படுத்துவதை முன் அறிவிப்பின்றி கண்காணிக்கவும் பதிவு செய்யவும் கூடும் என்பதைத் தயவு செய்து கருத்தில் கொள்ளவும்.

## பொருட்கள்மிகுந்த சொத்துக்கள்

நாம் பயன்படுத்தும் அல்லது நம் பணியின் பகுதியாக தொடர்பு கொள்ளக்கூடிய Compass -இன் சொத்து நாசப்படுத்தப்படாமல், தவறாகப் பயன்படுத்தப்படாமல் அல்லது வீணாக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளும் கடமை நம் அனைவருக்கும் உள்ளது. Compass -இன் சொத்து மற்றவர்களால் பாழாக்கப்படுவது பற்றி முறையிடும் பொறுப்பும் நமக்கு உள்ளது.

நீங்கள் பயன்படுத்தும் Compass -இன் எந்த ஒரு சொத்தும் அது பாதுகாப்புடன் செயல்படுவதற்கும் தகுந்த முறையில் பயன்படுவதற்கும் ஏற்ப நன்றாகப் பராமரிக்கப்படுவதைத் தயவு செய்து உறுதி செய்து கொள்ளவும்.

---

**கே: மறு சுழற்சிக்காக நான் சில காகிதங்களை வெளியே எடுத்துச் செல்லும்போது ஒரு பையில் ஊதிய விபரங்கள் அடங்கிய ஊழியர்களின் பட்டியல்கள் இருக்கக் கண்டேன். இந்தத் தகவல்கள் யாராலாவது பார்க்கப்பட்டிருக்கும் என்று நான் கவலைப்படுகிறேன். நான் என்ன செய்வது?**

ப: அக்காகிதங்களை நீங்கள் மனித வளத்துறைக்கு எடுத்துப் போக வேண்டும் மற்றும் இந்த விஷயத்தை உங்கள் நேர் மேலாளரிடமோ அல்லது மனித வள அதிகாரியிடமோ தெரிவிக்க வேண்டும். ரகசியத்தகவல்களின் பாதுகாப்பு மற்றும் தனித்துவத்தைப் பராமரிப்பதற்கு நாம் அனைவரும் பொறுப்பாவோம் மற்றும் நீங்கள் என்ன பார்த்தீர்களோ அது குறித்து கவலைப்படுவது சரியே. மனித வளத்துறை அந்தக் காகிதங்களைப் பாதுகாப்புடன் அழிப்பதையும் மற்றும் அவற்றை யார் அங்கு விட்டுச் சென்றார்களோ அவர்களுக்குத்தகுந்த விதத்தில் அவர்கள் கடமையை உணர்த்த நடவடிக்கை எடுப்பதையும் உறுதி செய்யும்.

*எந்த ஒரு தகவல் அல்லது அறிவு, Compass -ஐத் தவிர வேறு எங்கும் வெளியிடப்படும்போது, Compass -இன் நலன்களை பாதிக்குமோ அது ரகசியத்தன்மை மிக்கத்தகவல் எனப்படும். இவற்றை உள்ளிட்ட உதாரணங்கள் (வரையறுக்கப்பட்டவை அல்ல):*

- *புதிய பொருள் அல்லது சேவையின் மேம்பாட்டு விபரங்கள்;*
- *பதிப்பிக்கப்படாத நிதித்தரவுகள்;*
- *தொழில் கருத்துக்கள், செய்முறைகள் அல்லது யுக்திகள்;*
- *விற்பனை, சந்தைகுறித்த அல்லது மற்ற கூட்டாண்மைத் தரவுகள்; மற்றும்*
- *ஊழியர்கள் தகவல்கள்.*

*ரகசியத்தன்மை பிரச்சினைகளுக்கு மேலாதரவு அல்லது வழிகாட்டலை உங்கள் நேரடி மேலாளர், வட்டார சட்டக்குழு அல்லது குரூப் சட்டத்துறையிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* **SpeakUp** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# நிறுவன சொத்துக்கள்

## தகவல் பாதுகாப்பு



Compass அமைப்புகள் - அதாவது நம் தகவல் தொழில் நுட்ப வன்பொருட்கள், மென்பொருட்கள், அலுவலக உபகரணம், தொலை பேசி மற்றும் மின்னஞ்சல் அமைப்பு - யாவும் Compass -இன் தொழில்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகளை ஒவ்வொரு பயனரும் தொழில் நெறிப்படியும் பொறுப்புள்ள வகையிலும் எப்போதும் பயன்படுத்தக் கோரப்படுகிறார்கள்.

நம் தகவல் தொழில் நுட்ப அமைப்புகளை பயன்படுத்தும் Compass -ஐயும் தனி நபர்களையும் பாதுகாக்க, Compass -இன் தகவல் தொழில் நுட்ப அமைப்புகளின் உங்கள் உபயோகம் எப்போதும் உறுதி செய்து கொள்ள வேண்டியது:

- அது நீங்கள் பணி செய்யும் நாட்டின் சட்டத்தை மீறாமல் இருத்தல்;
- Compass -இன் பெயரை தகராறில் இழுக்கும் அபாயத்தைத் தவிர்த்தல்; மற்றும்
- Compass -இன் தொழிலுக்கு நாசமோ பிளவோ உண்டாக்காமல் இருத்தல்.

சில சந்தர்ப்பங்களில், இணையத்தையோ மின்னஞ்சலையோ தவறாகப் பயன்படுத்துதல் கிரிமினல் குற்றமாகலாம். எந்த நாட்டில் பணி செய்து கொண்டிருக்கிறோமோ, அங்குள்ள சட்டக்கட்டுப்பாடுகளை நாம் புரிந்து கொண்டிருப்பதை மற்றும் அவற்றை கடைப்பிடிப்பதை உறுதி செய்து கொள்வதும் நம் ஒவ்வொருவரின் கடமை. நீங்கள் பணி செய்யும் நாட்டின் சட்டக் கட்டுப்பாடுகள் பற்றிய மேல் வழிகாட்டலுக்கு உங்கள் வட்டார சட்டக்குழுவிடம் பேசவும்.

எப்போதும் பின்வரும் அடிப்படை விதிகளைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்:

- அங்கீகரிக்கப்படாத வன்பொருள் அல்லது மென்பொருளை Compass -இன் அமைப்பில் நிறுவ அல்லது பயன்படுத்த வேண்டாம்;
- உங்களுக்குப் பயனர் பெயர் அல்லது கடவுச்சொல் ஒதுக்கப்பட்டிருந்தால் அதைப் பாதுகாக்கவும் மற்றும் அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவேண்டாம்;
- குற்றம், துன்பம் அல்லது தீங்கு விளைவிக்கும் மின்னஞ்சல்கள், ஆவணங்கள் அல்லது உருவப்படங்களை திறக்க, பதிவிறக்கம் செய்ய, உருவாக்க அல்லது பிறருக்கு மேலனுப்ப வேண்டாம்;
- சுய உபயோகத்திற்கு Compass அமைப்புகளை மிகக்குறைந்த அளவிற்கு பயன்படுத்தவும்; மற்றும்
- உள்ளூர் தகவல் தொழில் நுட்பக் குழுவின் அறிவுரைக்கேற்ப, உங்கள் கணினியில் இருக்கும் எந்த ஒரு தரவு அல்லது வேலையையும் அவ்வப்போது சேமிப்பதையும் காப்புப்படி எடுப்பதையும் உறுதிசெய்து கொள்ளுங்கள்.

---

**கே: வார முடிவில் வீட்டில் நான் ஒரு சிறு தொழில், கையால் செய்யப்பட்ட நகைகளை விற்றுக்கொண்டு, நடத்துகிறேன். இதற்கும் Compass -இல் நான் செய்யும் பணிக்கும் இடையில் முரண்பாடு ஏதும் இல்லை (என் நேர் மேலாளரிடம் இது குறித்து சோதித்து விட்டேன்) மற்றும் பொதுவாக இது என் வேலையை பாதிப்பதில்லை. தற்போது நிறைய தேவைகள் வந்து குவிந்துள்ளதால் வாடிக்கையாளர்கள் தேவைகளைச் சோதிக்கவும் என் இணைய தளத்தை அணுகவும் என் நண்பகல் உணவு ஓய்வு நேரத்தைச் செலவழிக்க எண்ணியுள்ளேன். இது அனுமதிக்கப்படுமா?**

ப: Compass சுருக்கமாகவும், எப்போதாவதும் பயன்படுத்த தன் இணையத்தொடர்பை அனுமதித்தாலும், நம் கொள்கை ஊழியர்களை பணியின் போது தன் இணைய தொடர்பை சொந்த பண ஆதாயத்திற்கும் லாபத்திற்கும் பயன்படுத்த அனுமதிப்பதில்லை. உங்கள் "வீட்டு"த் தொழிலை வீட்டில் நடத்துவது அவசியம்.

*இந்த வழிகாட்டல் Compass -இன் தகவல் தொழில் நுட்ப ஏற்கத்தகுந்த உபயோகம் கொள்கையுடன் (மெர்குரியின் வழியாக இதைப் பெற முடியும்) இணைத்துப் படிக்கப் பட வேண்டும். இதற்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் மேற்கோள் பகுதியில் காணலாம். எந்த பிரச்சினையிலாவது நீங்கள் தெளிவாக இல்லாவிட்டால் தயவு செய்து உங்கள் நேரடி மேலாளரிடம் பேசவும்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# புறச்செயல்



## அரசாங்கங்கள் மற்றும் பொதுச்சீரமைப்புகளுடன் செயல் தொடர்புகள்

Compass -ற்குப் பணி செய்யும்போது நீங்கள் அரசாங்க அதிகாரிகள் அல்லது பொதுச்சீரமைப்புகளின் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ள நேரிடும். விசாரணை அல்லது புலனாய்வு சம்பந்தமாக நீங்கள் அவர்களுக்கு ஏதாவதொரு தகவல் அளிக்கக் கோரப் பட்டால், நீங்கள் உண்மையானவராகவும், துல்லியமானவராகவும் இருப்பதையும், கம்பாஸின் சட்டபூர்வமான நலன்கள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்யும் கடமை உங்களுக்கு உள்ளது.

எப்போதும் எதிர்பாராத முகமையிடமிருந்து தகவலளிக்க வரும் வேண்டுகோள்களுக்கு செயல்படும் முன் உங்கள் உள்ளூர் சட்டக்குழுவைத்தொடர்பு கொள்ளவும். புலன் விசாரணையுடன் சம்பந்தப்பட்ட எந்த ஒரு தவல்கள் அல்லது கோப்புகள் பாதுகாக்கப்படுவதையும் அழிக்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்து கொள்ளவும். பதிவேடுகள் அப்புறப்படுத்தலுக்கான எந்த மின்னணு அமைப்புகளும், சம்பந்தப்பட்ட பதிவேடுகள் பத்திரமாக இருப்பதை உறுதி செய்ய தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை இது உள்ளிட்டது.

Compass -இன் ஊழியர்கள் புலனாய்வுக்கு முழு ஒத்துழைப்பு நல்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். தகுந்த முறையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் தகவல்கள் சேகரிப்பதை நீங்கள் தடுக்கக்கூடாது அல்லது புலனாய்வுடன் ஒத்துழைக்கும் எவருக்கும் எதிராகத்தாக்குதல் நடத்தக்கூடாது.

அரசாங்க அதிகாரிகள் உங்கள் அலுவலகம் அல்லது பகுதிக்கு வந்து தகவல்களைக் கோரினால், இந்த அடிப்படை விதிகளை பின்பற்றுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்:

- உங்கள் உள்ளூர் சட்டக்குழுவை உடனே தொடர்பு கொள்ளுங்கள்;
- அவர்கள் அடையாளத்தைக் கோருங்கள் மற்றும் அதன் நகலை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்;
- அவர்கள் எந்தத்துறையைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய புலனாய்வின் தன்மை என்ன என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்; மற்றும்
- அவர்கள் தொடர்ந்து கவனிக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு சந்தேகம் ஏதும் இருந்தால் உங்கள் உள்ளூர் சட்டக்குழுவை நீங்கள் தொடர்பு கொள்வது அவசியம் என்பதுடன் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொது சீரமைப்புகளுடன் நடந்து கொள்ளும் உள்ளூர் நடைமுறையுடன் உங்களுக்குப் பரிச்சயம் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

---

**கே: என் முந்தைய நிறுவனத்தில், எந்த ஒரு தகவலையும் வெளி நபர்கள் யாவருக்கும் அவர்கள் யாராக இருந்தாலும் தரக்கூடாது என்று நாங்கள் அறிவுறுத்தப்பட்டோம். ரகசியத்தன்மையை மீறியதற்காக நான் தொந்தரவுக்கு ஆளாக விரும்பவில்லை. நான் என்ன செய்தால் சரியாக இருக்கும்?**

ப: முதலில் நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் வட்டார சட்டக்குழுவைத் தொடர்பு கொள்ளல் - மூன்றாவது நபர்களுக்குத் தர வேண்டிய மற்றும் தரக்கூடாத தகவல்கள் பற்றி அவர்கள் அறிவுரை அளிப்பார்கள்.

*ரகசியத்தன்மை பிரச்சினைகளுக்கு மேலாதரவு அல்லது வழிகாட்டலை உங்கள் நேர் மேலாளர், வட்டார சட்டக்குழு அல்லது குரூப் சட்டத்துறையிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# புறச்செயல்

## சமூக மற்றும் தார்மீகச் செயல்



தொழிலில் வெற்றி சட்டக்கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப நடப்பதையும், கூடவே உள்ளூர் பழக்கவழக்கங்களுக்கும், தொழில் உறவு முறைகளைக் கட்டுப்படுத்தும் எழுதாச் சட்டங்களுக்கும் உணர்வு பூர்வமான ஆதரவு தருவதையும் சார்ந்திருக்கிறது. நாம் செயல்படும் சமுதாயங்கள் (எங்கிருந்து நாம் நம் ஊழியர்களை எடுக்கிறோமோ) நமக்கு முக்கியம்.

எந்த சமுதாயங்களில் நாம் செயல்படுகிறோமோ அதன் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு நிறைவான பங்களிப்பை அளிக்க Compass கடமைப்பட்டுள்ளது. நம் எல்லாச் செயல்முறைகளிலும் பரந்த சமூகப் பிரச்சினைகளை - தேசீய மற்றும் உள்ளூர் நலன்கள் உட்பட- கவனத்தில் கொள்ள பிரயாசைப் படுகிறோம். சமூகத்தின் நலனுக்குப் பங்களிக்க நம் தொழில் குறிக்கோள்களுக்கு தகுந்தவாறு நம் அறிவு நுட்பத்தை பயன் படுத்துகிறோம்.

மற்ற நாடுகள், சமூகங்களின் கலாசாரங்களையும் உள்ளூர் பழக்கங்களையும் மதிப்பதும் எப்போதும் உள்ளூர் சட்டங்களை பின்பற்றுவதும் முக்கியம். ஒரு நாட்டில் ஏற்கத்தகுந்த சில தொழில் நடைமுறைகள் வேறொரு நாட்டில் ஏற்கப்படாமல் போகலாம். வேறுபாடுகளை அறிந்திருப்பது நீங்கள் தொழில் செய்யத்தேவையான வழியைப் பாதிக்கலாம்.

அனைத்து Compass ஊழியர்களும் பின்வரும் அடிப்படை விதிகளுக்கு இணங்க நடக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள்:

- நீங்கள் பணிபுரியும் சமூகங்கள் மற்றும் நாடுகளின் கலாச்சாரம் மற்றும் தொழில் பழக்கங்களை எப்போதும் மதியுங்கள் (அவைகள் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் கொள்கைகளுக்கு முரண்படாத வரையில்);
- எப்போதும் உள்ளூர் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் - இதில் உதவி ஏதும் தேவையெனில் உங்கள் உள்ளூர் சட்டக்குழுவைத் தொடர்பு கொள்ளவும்; மற்றும்
- எப்போதும் உங்கள் நேரடி மேலாளருக்குத் தெரிவியுங்கள் குறிப்பிட்ட அரசாங்கமல்லாத முகமைகளுடனான திட்டமிட்ட தகவல் பரிமாற்றம் பற்றி மற்றும் இத்தகைய நபர்களுடன் ஈடுபடும் முன் அவர் ஒப்புதலை நாடுங்கள்.

தன்னுடைய நன்கொடைகள் மற்றும் உபயங்கள் மூலம், Compass, தனது அனைத்து பங்குதாரர்களின் அனுகூலத்திற்காகவும் தான் பணி செய்யும் சுற்றுச்சூழல் மற்றும் சேவை செய்யும் சமூகங்கள் மீது ஏற்படும் தனது தாக்கத்தை மேம்படுத்த முயல்கிறது.

---

**கே: வாடிக்கையாளர் ஒருவர் என்னைச் சந்தித்து நம் உணவகத்தில் இரவு உணவு தர்மத்திற்காக ஏற்பாடு செய்யச்சொன்னார். நான் இதைச்செய்ய இயலுமா?**

ப: தயவு செய்து உதவ ஒப்புக்கொள்ளும் முன் உங்கள் நேரடி மேலாளரிடம் பேசவும். Compass சமுதாயத்தை ஆதரிப்பதையும், தர்மச் செயல்களையும் ஊக்குவிக்கிறது, என்றாலும் ஒப்புதல்களுக்கான வழிமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்து கொள்ளல் அவசியம், குறிப்பாக அந்த வேண்டுகோள் ஒரு வாடிக்கையாளரிடம் இருந்து வந்துள்ளதால்.

*எந்த தார்மீக நன்கொடைகள் அளிப்பதற்கும் முன் Compass -இன் ஒப்புதல்கள் வழிமுறை பின்பற்றப்படவேண்டும். தயவு செய்து Compass -இன் தார்மீக நன்கொடைகள் கொள்கையுடன் (இதற்கான இணைப்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் காணலாம்) பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.*

*Compass நிறுவனம் ஒன்று அளித்த எந்த தார்மீக பங்களிப்பும் உங்கள் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் முழுவதுமாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் மற்றும் எங்கு சட்டத்தினால் கோரப்படுகிறதோ அங்கு பொதுப்பதிவேடுகளில் Compass -ஆல் அல்லது பெறுனரால் வைக்கப்படவேண்டும்.*

*நம் சமுதாய மற்றும் தார்மீக செயல்கள் மீதான மேலாதரவு அல்லது வழிகாட்டலை உங்கள் நேரடி மேலாளர், வட்டார சட்டக்குழு அல்லது குரூப் சட்டத்துறையிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# புறச்செயல்

## அரசியல் செயல்

செய்யும் தொழிலின் ஒரு பகுதியாக, உலக முழுதும் Compass சில சமயங்களில் அரசு அமைப்புகள், பொது நலக்குழுக்கள், தொழில் கூட்டமைப்புகள் மற்றும் இது போன்ற அமைப்புகளுடன் ஈடுபடுகிறது. இவ்வாறு செய்யும்போது, அரசியல் செயல் சம்பந்தப்பட்ட உள்ளூர் சட்டங்களுக்கு இணங்கி நடப்பதை நாம் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பது Compass -இன் கொள்கை அல்ல. இருப்பினும், Compass -இன் சில வழக்கமான செயல்கள், நாம் அறியாமலே, கட்டாயம் நம் கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் நன்கொடைகள் மற்றும் செலவைக் கட்டுப்படுத்தும் ஐக்கிய அரசின் சட்ட நிபந்தனைகளின் பரந்த வரைக்குள் வரலாம். இம்மாதிரியான எந்த செலவும் முதலில் Compass Group PLC -இன் பங்குதாரர்களால் கட்டாயம் அனுமதிக்கப்பட்டு அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும்.

குழும ஊடக உறவுகள் அல்லது குரூப் சட்டத்துறை வழிகாட்டல் அன்றி Compass ஊழியர்கள் அரசியல் ஆதரவில் ஈடுபடுவதோ அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி வேட்பாளர்கள், சீரமைப்பாளர்கள் அல்லது பொதுநலக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருப்பதோ கூடாது. அதிக விபரங்களுக்கு தயவு செய்து கூட்டாண்மை தகவல் தொடர்புகள் தொகுப்பு விதிகளைக் காணவும் (இந்த கொள்கைக்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள்கள் பகுதியில் காணலாம்).

இந்த அடிப்படை விதிகளைக் கடைப் பிடிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்:

- கட்சி அரசியல் செயல்களை வளர்க்கும் எந்த ஒரு அரசியல் அமைப்புக்கும் Compass -இன் சார்பாக நன்கொடை அளிக்க முயல வேண்டாம்;
- சொந்த அரசியல் செயல்களை உங்கள் பணியிலிருந்து தனிப்படுத்துவதோடு நிறுவனத்தின் நேரம் மற்றும் வளங்களை அவற்றை ஆதரிக்கப் பயன்படுத்த வேண்டாம் - மேல் தகவல்களுக்கு தயவு செய்து இந்த கோட்பாட்டுத் தொகுப்பின் ஆர்வ முரண்பாடுகள் பகுதியைப் பார்க்கவும்; மற்றும்
- Compass சார்பாக எந்த ஒரு அரசு, சீரமைப்பாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது ஆதரவுக்குழுக்களைத் தொடர்பு கொள்ளுமுன், குரூப் தலைமை அதிகாரி ஊடக உறவுகள், குழும முதலீட்டாளர் உறவுகள் அல்லது குழுமச் சட்டத்துறையைத் தொடர்பு கொள்வதை உறுதி செய்து கொள்ளவும்.

---

**கே: சுற்றுச்சூழலின் மீது உண்டாகும் பயன்பாட்டிற்குப்பின் தூக்கியெறியப்படும் கோப்பைகளின் தாக்கத்தைக் குறும்படம் எடுக்கும் ஆதரவு கோரும் குழு ஒன்று என்னைத்தொடர்பு கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் நம் செம்மையான நன்மதிப்பை இது உயர்த்த உதவும் என நன் கருதுகிறேன். இந்தப் படத்தை அரசாங்கத்திடம் எடுத்துச்செல்ல அவர்கள் உத்தேசித்திருப்பதாக நான் நம்புகிறேன். இந்தப் படத்தில் நான் பங்கு பெற இயலாது என்பது இதன் பொருளா?**

ப: நீங்கள் கேள்வி கேட்டது சரி தான். நீங்கள் குரூப் தலைமை ஊடக உறவு அதிகாரியைத் தொடர்பு கொண்டு கருத்துருவைப்பற்றி விளக்கமாகப் பேச வேண்டும். அவர், குழுமச் சட்டத்துறையுடன் சேர்ந்து, இந்த விஷயத்தில் நீங்கள் எப்படிச் செயல்படலாம், எந்த நிலை வரை நீங்கள் ஈடுபடலாம் என்று அறிவுறை வழங்கக்கூடும்.

*Compass -இன் அரசியல் செயல் பிரச்சினைகளுக்கு மேலாதரவு அல்லது வழிகாட்டலை உங்கள் நேரடி மேலாளர், வட்டார சட்டக்குழு அல்லது குரூப் சட்டத்துறையிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும்* ***SpeakUp*** *-ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# புறச்செயல்

## வெளியுறவு தகவல் தொடர்புகள்



நம் தினசரிப் பணிகளின் பகுதியாக முக்கிய "பங்குதாரர்களை" தொடர்பு கொள்ள நேரிடலாம் - ஊழியர்கள், தொழில் பங்காளிகள், சேவை பெறுனர், வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள், ஊடகம், சமுதாயங்கள் மற்றும் அரசுகள் ஆகியோரை இது உள்ளிடலாம். Compass தகவல் தொடர்புகள் தொகுப்பு விதிகளுக்கு ஏற்ப பங்குதாரர்களுடன் நம் தகவல் தொடர்புகள் அமைவது மிக அத்தியாவசியமானது.

Compass தொழில்கள் பற்றி சம்பிரதாயமாகவோ அசம்பிரதாயமாகவோ நிருபர்கள் அல்லது முதலீட்டு பகுப்பாய்வாளர்களுடன் நீங்கள் அவசியம் பேசக்கூடாது. சந்தையாளர்கள், பகுப்பாய்வாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் போன்ற வெளியுறவு தொடர்பாளர்களுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் மட்டுமே பேச அனுதிக்கப்பட்டவர்கள். இதன் பொருள்:

- நம் தலைமை நிர்வாக அதிகாரி, குழும நிதி இயக்குனர் மற்றும் Compass Group PLC முக்கியக்குழுவின் இயக்குனர்கள்;
- கூட்டாண்மை யுக்தி, முதலீட்டாளர் மற்றும் ஊடக இயக்குனர்;
- குழுமத் தலைமை ஊடக உறவுகள் அதிகாரி;
- குழுமப் பொது ஆலோசகர் மற்றும் நிறுவனச்செயலாளர்; மற்றும்
- மேலே பட்டியலிடப்பட்ட நபர்களில் ஒருவரால் தெளிவாக அனுமதிக்கப்பட்ட மற்ற நபர்கள்.

மேலுள்ள நபர்களின் தொடர்பு விபரங்களை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியைக் காணவும். அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி குறிப்பிடத்தக்க தகவலை Compass -க்கு வெளியே எவருக்கும் அளிப்பதிலிருந்து மற்ற அனைத்து ஊழியர்களும் தடை செய்யப்பட்டு உள்ளார்கள். வெளிநபர் நம்முடைய தொழில் பற்றிய தகவலுக்காக உங்களை அணுகினால், முதலில் அந்த விசாரணையை அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு திருப்பி விடுங்கள்.

உட்தகவல்கள் (அதாவது Compass Group PLC -இன் பங்குகளின் விலை மீது குறிப்பிட்ட தாக்கம் ஏற்படுத்தக் கூடிய தகவல்கள்) உள்ளிட்ட அறிக்கை, பத்திரிகை செய்தி, உள் அல்லது வெளி நிகழ்ச்சிகளை குரூப் முதலீட்டாளர் உறவுகள் அதிகாரியின் முன் அனுமதியின்றி தொழிலகங்கள் வெளியிட அனுமதிக்கப்பட வில்லை எனினும் அவர் அவற்றை வெளியிட தகுந்த ஏற்பாடுகள் செய்வார். மேல் வழிகாட்டலுக்கு, தயவு செய்து தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் உள் வர்த்தகப்பகுதியைக் காணவும்.

---

**கே: Compass -ஐப் பற்றி செய்தித்தாளில் சில தவறுகளுடன் ஒரு கட்டுரையைக் கவனித்தேன். நான் அந்த செய்தித்தாள் நிறுவனத்தை தொடர்பு கொண்டு அவர்கள் அறிக்கையை திருத்தச்சொல்லலாமா?**

ப: இந்த வகை விஷயங்களில் நீங்கள் எச்சரிக்கையாய் இருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சி ஆனால் தயவு செய்து செய்தித்தாள் நிறுவனத்தை நீங்களாகவே தொடர்பு கொள்ள வேண்டாம். எந்த ஒரு ஊடகத்தகவல் தொடர்புகளும் குழும வெளியுறவு தகவல் தொடர்புகள் குழு வழியாகவே கையாளப்பட வேண்டும். தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் இந்த துறைகள் தொடர்பு தகவல்கள் முழுதையும் காணலாம்.

*Compass தகவல் தொடர்புகள் தொகுப்பு விதிகள் கம்பாஸின் உள்ளேயும், அதன் உள் மற்றும் வெளி உறவுத் தொடர்பாளர்கள் மத்தியிலும் சீரான தகவல் பரிமாற்றங்களை உறுதி செய்ய உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கான தொடர்பை தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் தொகுப்பின் மேற்கோள் பகுதியில் காணலாம்.*

*வெளியுறவு தகவல் தொடர்புகள் பற்றிய மேலாதரவு அல்லது வழிகாட்டலை நீங்கள் உங்கல் நேரடி மேலாளர், உள்ளூர் சட்டக்குழு அல்லது குழும முதலீட்டாளர் மற்றும் ஊடக உறவுகள் குழு அல்லது குரூப் சட்டத்துறை யிடமிருந்து பெறலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# புறச்செயல்

## சுற்றுச்சூழல்



சுற்றுச்சூழல் என்பது ஒரு துறையல்ல, அது நம் நடவடிக்கைகளை அனைத்தின் அவசியமான பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மனப்பாங்கு மற்றும் அனுகுமுறை ஆகும். சுருக்கமாக, தங்கள் பதவி எதுவானாலும், ஒவ்வொருவரும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும் சுற்றுச்சூழல் பொறுப்பை வெளிப்படுத்துவது மிக முக்கியம்.

உலகின் மிகப்பெரிய உணவு சேவை நிறுவனங்களில் ஒன்று என்ற வகையில், செயல்படக்கூடிய உள்ளூர் சுற்றுச்சூழல்களில் முக்கியமாகவும், உலகச் சுற்றுச்சூழலில் பொதுவாகவும் தாக்கம் உள்ளதை Compass அங்கீகரிக்கிறது.

உரிய அனைத்து சுற்றுச்சூழல் சட்டங்களுக்கு இணங்கும் போதே, Compass தன் அனைத்து செயல்பாடுகளிலும் அறிமுகப்படுத்தப்போகின்ற தனிப்பட்ட நடத்தைகளின் பொதுத்தொகுப்பையும் உருவாக்கியுள்ளது. நம் தொழில் முழுவதும் நாம் தொடர்ந்து முன்னேற்றங்களை ஏற்படுத்துகிறோம், குறிப்பாக விநியோக தொடர்பு பகுதிகளிலும் சுற்றுச்சூழல் செயல்பாட்டிலும்.

நம் அமைவிடங்களில், பயன்பாடுகள், உபகரணம், எரிபொருள் போன்றவற்றைக் கொள்முதல் செய்வதில் நமக்கு நேரிடையான பொறுப்பு இல்லாத அநேக இடங்களில், நம் செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் செயல்பாட்டை எவ்வளவு சிறந்த முறையில் மேம்படுத்த இயலும் என்பதைக் கருதுவதற்கு நாம் நம் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாகப் பணிபுரிகிறோம்.

நீங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய அடிப்படை விதிகள்:

- சுற்றுச்சூழல் விஷயங்களில் அனைத்து ஊழியர்களும் நிறுவனத்தின் விதிகளையும் நடைமுறைகளையும் ஒட்டி நடக்க வேண்டும்;
- பொறுப்பான சுற்றுச்சூழல் பழக்கங்களை செயல்படுத்தத் தேவையான சரியான தகவல்கள், பயிற்சி மற்றும் கருவிகளைப் பெற்றிருப்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்;
- உங்கள் பணிச் செயல்களின் விளைவாக சுற்றுச் சூழல்களில் வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களைத் தடுப்பதை அல்லது குறைப்பதை உறுதி செய்து கொள்ளவும்;
- ஒழுங்கான முறையில் எல்லா கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதையும் மற்றும் சிறந்த கழிவு மேலாண்மை பழக்கத்தைக் கடைப்பிடிப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும். உங்கள் பணியிடத்தில் குறிப்பிட்ட கழிவுப்பொருளை அகற்றுவதற்கான மிகச்சிறந்த சுற்றுச்சூழல் தேர்வு பற்றி நீங்கள் அறிந்திருப்பது மிகவும் முக்கியம். கழிவுப்பொருளைச் சரியற்ற முறையிலோ அல்லது சட்டத்திற்குப் புறம்பாகவோ வெளியேற்றுவதாக எந்த ஊழியராவது காணப்பட்டால் அவர் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாகக்கூடும்;
- அனைத்து ஊழியர்களும் அவர்கள் பணியின் எல்லா நிலைகளிலும் சக்தியைத் திறமையுடன் கையாண்டு அதைச் சேமிக்க தகுந்த நடவடிக்கைகளை இயன்ற வரையில் எடுக்க வேண்டும்;
- அனைத்து ஊழியர்களும் மறுசுழற்சிக்குள்ளான பொருட்கள் எங்கெல்லாம் கிடைக்கின்றனவோ அவற்றை அங்கு தங்கள் பணிச்செயல்களில் பயன்படுத்த வேண்டும் மற்றும் உரிய எந்தப்பொருட்களையும், அமலில் உள்ள உள்ளூர் அல்லது தேசிய மறுசுழற்சித் திட்டங்களுக்கு ஏற்ற வகையில் மறு சுழற்சிக்கு உட்படுத்த வேண்டும்; மற்றும்
- அனைத்து ஊழியர்களும் நீரை வீணாக்கும் செயல்களை அவர்கள் பின்பற்றாததை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

---

**கே: நான் பணி செய்யும் இடத்தில் ஆரோக்கியம் மற்றும் பதுகாப்பு பற்றிய கவலையை எழுப்பினால் நான் தண்டிக்கப்படுவேனா? பயன் படுத்திய சமையல் எண்ணெயை வெளியிலுள்ள கழிவு நீர்ப்பாதையில் கொட்டி அகற்றுமாறு நாங்கள் பணிக்கப்பட்டிருக்கிறோம்.**

**ப**: Compass -இன் மிக முக்கியமான கடமை ஆரோக்கியமும் பாதுகாப்பும். உங்களுக்கு ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்த கவலைகள் ஏதும் இருக்குமானால், அவற்றை அவசியம் உங்கள் நேரடி மேலாளரிடம் உடனே முறையிடவேண்டும் மற்றும் தேவையெனில் பணியை நிறுத்தவும் அல்லது உங்களுக்கு கவலைகள் அளிக்கும் செயல்களிலிருந்து விலகி இருக்கவும். உங்கள் நேரடி மேலாளரிடம் பேசுவது அசௌகரியமாக இருந்தால், நீங்கள் உங்கள் உள்ளூர் சட்டக்குழு, மனித வள அதிகாரி அல்லது **Speak Up** ஐத் தொடர்பு கொள்ளலாம். குறைபாடுகளை உண்டாக்கும் எவருக்கும் எவ்வகையான எதிர்த்தாக்குதலும் ஏற்படுவதை நாம் பொறுக்க மாட்டோம்.

*சுற்றுச்சூழல் என்று நாங்கள் குறிப்பிடுவது நாம் செய்யும் செயல் ஏதும் எங்கும் பாதிப்பை உண்டாக்குதல், அதாவது:*

- *சத்தம், வாசனைகள் மற்றும் புகையால் பாதிக்கப்படும்நம் அருகிலுள்ள சுற்றுப்புறங்கள்;*
- *மாசு, போக்குவரத்து மற்றும் நாம் அகற்றும் கழிவுகளால் பாதிப்படையும் உள்ளூர் சுற்றுச்சூழல்; மற்றும்*
- *எரிசக்திக்கான மக்கிய பொருட்களின் எரிபொருட்களின் பயன்பாடு அல்லது காற்று வெளியை நாசமாக்கும் இரசயனப்பொருட்களின் பயன்பாடு ஆகியவற்றால் பாதிப்படையும் உலக சுற்றுச்சூழல்.*

*சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான மேலாதரவு அல்லது வழிகாட்டலை உங்கள் நேரடி மேலாளர், வட்டார சட்டக்குழு அல்லது மனிதவள அதிகாரியிடமிருந்து பெறலாம். நம் சுற்றுச்சூழல் கொள்கை அறிக்கைக்கான தொடர்பை நீங்கள் தொழில் ஒழுக்கக் கோட்பாடுகள் நடத்தையின் மேற்கோள்கள் பகுதியிலும் காணலாம்.*

*நீங்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு குறைபாடு அல்லது பிரச்சினை குறித்தும் **SpeakUp** -ஐ தொடர்பு கொண்டு விவாதிக்க இயலும் என்பதை மறக்க வேண்டாம்.*

# மேற்கோள் பகுதி

## கொள்கைகளுக்கும் மேல் விபரங்களுக்குமான தொடர்புகள்

Compass Group PLC பற்றிய பொதுப் பயனுக்கான ஆவணங்கள் இணைய தளம் (www.compass-group.com)

1. ஒழுங்குநெறிக் கோட்பாடுகள்
2. உணவுப்பாதுகாப்பு கொள்கை அறிக்கை
3. சுற்றுச்சூழல் கொள்கை அறிக்கை
4. கொள்முதல் மற்றும் வினியோக தொடர் அறிக்கை

அகப் பயன்பாட்டுக்கு மட்டுமான ஆவணங்கள் (தயவு செய்து வெளியில் வினியோகிக்க வேண்டாம்)
மெர்குரியில் கொள்கைப்பகுதியிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்
http://mercury.compass-group.com

1. Compass குழுமத்தின் மோசடிக் கொள்கை
2. Compass குழுமத்தின் பரிசுகள் மற்றும் உபசரணைக் கொள்கை
3. Compass குழுமத்தின் அறிவுசார் சொத்து கொள்கை
4. Compass -இன் தகவல் தொழில் நுட்ப ஏற்கத்தகுந்த பயன்பாட்டுக் கொள்கை
5. Compass குழுமத்தின் தார்மீக நன்கொடைகள் கொள்கை
6. குழுமத் தகவல் தொடர்புகள் தொகுப்பு விதிகள்
7. Compass குழும Speak Up திட்டம்
8. குழும ஒப்புதல்கள் கையேடு
9. Compass -இன் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் கையேடு

# மேற்கோள் பகுதி

## தொடர்புகள்

**குழுமச்சட்டத்துறை**

மார்க் வொய்ட் குழுமத்தின் பொது ஆலோசகர் மற்றும் நிறுவனச்செயலர் +44 (0) 1932 573006
mark.white@compass-group.co.uk

டெப்பி ப்ரைஸ் உதவிப் பொது ஆலோசகர் +44 (0) 1932 573012
debbie.price@compass-group.co.uk

**குரூப் மனித வளம்**

ஜேன் கிங்க்ஸ்டன் குரூப் மனிதவள இயக்குனர் +44 (0) 1932 573103
jane.kingston@compass-group.co.uk

**உள் தணிக்கை**

ட்ரெவோர் கெல்னர் குருப் உள் தணிக்கை இயக்குனர் +44 (0) 1932 573158
trevor.gelnar@compass-group.co.uk

**கூட்டாண்மை யுக்தி, முதலீட்டாளர் மற்றும் ஊடக உறவுகள்**

ஸாரா ஜான் கூட்டாண்மை யுக்தி, முதலீட்டாளர் மற்றும் ஊடக உறவுகள் இயக்குனர் +44 (0) 1932 573064
sarah.john@compass-group.co.uk

**உள் தகவல் தொடர்புகள்**

கேட்டி பர்க் குரூப் உள் தகவல் தொடர்புகள் +44 (0) 1932 574173
katie.burke@compass-group.co.uk

**குரூப் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்**

நிக்கி க்ரேஃபோர்ட் குரூப் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் இயக்குனர் +44 (0) 1932 573141
Nicki.crayfourd@compass-group.co.uk

**மற்றவை**

Speak Up
www.compass-speakup.com